

# ஸ்ரீநந்து



ஆசிரியர் : அருட்சேனை தளபதி கு. இரவிமணி B.Sc., B.Teah.,

[illegible]து : 1 15-7-93 விலை ரு. 3-50 ஆரணம் : 2

# வேண்டுகோள்

வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள். இந்து ஆரணத்தை படித்து விட்டு சும்மா இருந்து விடாமல் உங்கள் கருத்துக்களை இதழுக்கு எழுதி அனுப்புங்கள்.

'இந்து ஆரணம்' படித்து விட்டு தூக்கி போடும் காகித குப்பை இல்லை. ஒவ்வொரு வரியும் தமிழ் வரலாற்று ஆராய்ச்சியின் பயனாக எழுந்த பொன் எழுத்துக்கள் என்பதை மறந்து விடாதீர்கள். தக்க கருத்துக்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

இப்படிக்கு
ஆசிரியர்

# இந்து ஆரணம்

[மாத இதழ்]

இந்து : 1 15-7-93 விலை ரூ. 3.50 ஆரணம் : 2


## தலையாய தலையங்கம்


அருளியவர் :

அந்நணர் அண்ணல்

ஞானாச்சாரியார்


சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழாதான்....! இந்து வேத, இந்து வேதாகம விடுதலை விழா.

இந்து மத விடுதலை விழா.

இந்துக்களின் விடுதலை விழா.

இந்திய அகப் பண்பாட்டின் பாதுகாப்பு விழா.

இந்தியப் புறநாகரீகத்தின் எழுச்சி விழா.

இந்திய ஒருமைப் பாட்டை உருவாக்கும் விழா.

.... .... .... ....

என்ற பேருண்மைகளை இந்தியர் எல்லோரும் உணர வேண்டும், உணர வேண்டும், உணர வேண்டும்.

ஒவ்வோர் இந்துவும் மற்ற இந்துக்களுக்கும் உலகத்தோர்க்கும உணர்த்திட முற்பட வேண்டும்.

இந்து, இந்துவேதம், இந்துவேத மதமான இந்துமதம், இந்திவம், இந்தியா, இந்து வாழ்க்கை இந்து இலக்கியம் முதலியனவெல்லாம் மாற்று மதத்தவர்களாலும், வேறறு வேதத்தவர்களாலும, அன்னிய நாட்டவர்களாலும் பலவேறு வகையாகத் தாக்கி! தகர்த்துத் தகர்த்து!!; கணிசமான அளவு தன்டு பொடியாக்கப்பட்டு தரையோடு தரையாக்கப்பட்டு இன்னும சிறிது காலததில் இருநத இடமே தெரியாமல போய்விடும என்ற நிலை வளர்ந்து, வளர்ந்து வளபபட்டு வளப் பட்டு வலிமைப்பட்டு .வலிமைப்பட்டு ஆட்சிப் பொலிவு உறழுக்கொண்டிருக்கும் நேரத்திலே காஞ்சி சங்கரர் மடத்து மடாதிபதியும், காஞ்சி காமகோடி பீடத்து பீடாதிபதியும், காஞ்சிப் பெரியவாள் சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமி அவர்களின் நூற்றாண்டு விழா செய்தி அறிவிக்கப்பட்டது! அறிவிக்கப்பட்டது!! அறிவிக்கப்பட்டது!!!

3. நமது தாய்த்திருநாட்டின் பெரும்பாலான சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் பல் வேறு வகையான காரண காரியங்களால் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் மதிக்க முடியாதவர்களாக, போற்றிப் பேணிப்பாதுகாத்திட முடியாதவர்களாக மாறியுள்ள காரணத்தால் இந்துக்களின் உரிமைகளும், பெருமைகளும், ஒப்புயர்வற்ற, தனித்தன்மைகளும் அன்னியரால் சிதைக்கப்பட்டு சிதையவும்; சீரழிக்கப்பட்டு சீரழியவும்; சிறுமைப்படுத்தப்பட்டு சிறுமையுறவும்; கொடுமைப்படுத்தப்பட்டு நலிந்து மெலியவும் நேரிட்டுவிட்டது! நேரிட்டுவிட்டது!! நேரிட்டுவிட்டது!!!

4. இவற்றிற்கெல்லாம் தத்துவ அடிப்படையில் செயல் சித்தாந்த அடிப்படையில் அறவழியில் அருள் நெறிப்படி முடிவுகட்டி இந்து வேதத்துக்கும, இந்து மதத்துக்கும், இந்துக்களுக்கும் விடுதலை தேடித் தரத்தான் அருளமிகு காஞ்சிப் பெரியவாள் சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் தமது நூற்றாண்டு விழாவின் முதல் பணியாக, ஆரம்ப நிலையாக துவக்க நிகழ்ச்சியாக 'இந்து வேதாகமக் கல்லூரிகளை நாடு முழுதும் துவக்கி, காஞ்சி ஏனாதி வட்டாரத்தில் இந்து வேதாகமத்திற்கென ஒரு பெரிய பல்கலை கழகத்தையும் நிறுவியுள்ளார்! நிறுவியுள்ளார்! நிறுவியுள்ளார்.

5. இம்மாபெரும் செயல்திட்டத்தால் நூற்றாண்டு விழா காணும் சங்கராச்சாரியார் அவர்கள்

இந்துவேத அங்கங்களும், இந்து வேதாகம நூல்களும், இந்துச் சாத்திர தோத்திரங்களும், சம்பிரதாயங்களும், சடங்குகளும், விரதங்களும், விழாக்களும், கல்லூரிப் பாடபுத்தகங்களாகவும், பல்கலைக்கழக ஆராய்ச்சி நூல்களாகவும் உருவாகிட வழி வகுத்துள்ளார். வழிவகுத்துள்ளார், வழி வகுத்துள்ளார்; வழி வகுத்திட்டார். வழிவகுத்திட்டார், வழிவகுத்திட்டார். இவற்றால், இனிமேல், நாத்திகரும பகுத்தறிவுவாதிகளும் சீர்திருத்தவாதிகளும கண்மூடித் தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், இந்துக்களின் வாழ்வியல்களையும இழித்தும் பழித்தும், நகைத்தும் நகைத்தும் கிண்டல் செய்தும் கேலிபேசியும் பேசித் திரிவது தடுக்கப்பட்டுவிட்டது. தடுக்கப்பட்டுவிட்டது, தடுக்கப்பட்டுவிட்டது.

எனவே! எனவே! எனவே! சங்கராச்சாரியாரின் நூற்றாண்டுவிழாதான் —

இந்து வேத, இந்து வேதாகம விடுதலை விழா!

இந்துமத விடுதலை விழா!

எனவே! எனவே! எனவே! இந்தியா முழுதும்!; இந்துக்களின் இல்லங்கள் தோறும்!!; இந்துக்களின் வாழ்நாள் முழுதும் இந்தியாவிலுள்ள ஊர்கள்தோறும், தெருக்கள் தோறும் சங்கராச்சாரியாரின் நூற்றாண்டுவிழா கொண்டாடப்படவேண்டும்! கொண்டாடப்படவேண்டும்!! கொண்டாடப்படவேண்டும்!!! கொண்டாடப்பட்டேயாக வேண்டும்! கொண்டாடப்பட்டேயாக வேண்டும்!! கொண்டாடப்பட்டேயாக வேண்டும்!!!... என்ற அறிவிப்பை பதினெண் சித்தர் மடம் பீடம் குருகுலம் அருளாணையாக அறிவிக்கிறது! அருளாணையாக அறிவிக்கிறது! அருளாணையாக அறிவிக்கிறது!

இந்துக்களே இனியாவது சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! சிந்தியுங்கள்!!! சந்தியுங்கள்! சந்தியுங்கள்!! சந்தியுங்கள்!!! குலவழி குருபீடத்தை! குருமகா சன்னிதானத்தை! ஞால குருவை! சித்தர் அரசயோகிக் கருவூறாரை. ●

---

# இராசி பலன் பற்றிய அதிசய செய்தி

இருக்குவேதம், அசுர வேதம், யாம வேதம், அதர்வன வேதம எனும் நான்கு வேதங்களிலும் இராசி பலன்களும், இராசி பயன்களும் பார்த்து செயல்படும் முறைகள் மிகத் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன.

**இராசி [illegible]** என்பது 12 இராசி, 9 கோள்கள், சில விண்மீன்கள் இவற்றின் நிலைகளால்; பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், மனித வாழ்வியலுக்கும ஏற்படக் கூடிய பாதிப்புகள அல்லது கெடுதல்கள இவற்றைக் குறைப்பதற்கான அல்லது முழுவதுமாக வராமல் தடுப்பதற்கான வழி முறைகளைப் பற்றி விளக்குவதாகும.

**இராசி பலன்** என்பது 27 விண்மீன்கள், 9 கோள்கள், 12 இராசிகள இவற்றின் நிலைகளால் பயிரின, உயிரின, மனித வாழ்வியலுக்கு ஏற்படும பலன்களை விளக்குவதாகும், இவற்றின் கூட்டுத் தொகையான 48 (ஒரு மண்டலம்) என்ற எண்ணிக்கைப்படி இராசி பலன் 48 நாட்களுக்கு ஒருமுறைதான் மாறும என்று இருக்குவேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டுக்கு எட்டு மண்டலம் என்று இந்த நான்கு வேதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. பொதுவாக ஒரு மண்டலம் என்றால் 48 நாள். ஆனால் விண்வெளியிலிருந்து 12 இராசிகளின் ஆற்றல் இம்மண்ணுலகுக்கு வந்து ஆட்சி செய்வதற்கு ஏறத்தாழ ஒன்றரை நாட்கள் ஆகின்றன. இதேபோல் இராசிகளின் ஆதிக்கம் விலகும் போதும் ஒன்றரை நாட்களுக்கு முன்பிருந்தே நலிய ஆரம்பிக்கிறது. அதாவது இராசி நிலை 48 நாட்களுக்கு ஒரு முறை மாறினாலும், ஆட்சி நிலையானது ஆட்சிக்கு வருவதில் ஏறத்தாழ ஒன்றரை நாளும் முடிவதில் ஒன்றரை நாளும் வீணாகிறது. எனவேதான், மண்டலம் என்றால் 48 நாட்கள் என்ற கணக்கும், 45 நாட்கள் என்ற கணக்கும் வழக்காற்றில் உள்ளது.

இதன்படி இராசிகளின் பலன்களை ஆண்டிற்கு எட்டு முறைதான் கணிக்க வேண்டும். எனவே நாளதோறும, வாரந்தோறும், மாதந்தோறும் இராசி பலன் கணிப்பது, கூறுவது தவறு. உரிய பலனை தராது.

( வளரும் )

தொகுப்பு

( இந்து வேத நூல்களிலிருந்து )

சித்தரடியார் : [illegible]

# இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் புரிந்துகொள்ளுங்கள்

ஞானாச்சாரியாரின் அறிவுரைகளிலிருந்து தொகுத்தவர்கள் :

சித்தரடியார் - டி. ஆர். பிரபாகரன் - சீ. உலகநாதன்
இரா. வெங்கடேசன்

(16) இந்த இந்து வேதம்தான் கோயில் தோறும் பல கடவுளர் வாழுகின்றனராதலால்; அவர்க்கு மட நூல் விதிப்படி அக்கடவுளருக்கு விருப்பமான உணவைச் சமைத்துப் படையலிட்டுத் தான் வழிபட வேண்டும், வணங்க வேண்டும், கும்பிட வேண்டும்; பூசை செய்ய வேண்டும்'' என்று வழி காட்டுகிறது.

(17) இந்த இந்து வேதம்தான் 'விருப்பமான கடவுளரை விருப்பமான இடத்தில் இருந்து அல்லது கோயிலில் இருந்து 'எளவல் முறை', 'ஏசல் முறை', 'அழுகை முறை', 'தொழுகை முறை' என்ற நான்கு முறையினில் விருப்பமான முறையினில் விருப்பமான முறையில் போற்றிப் பணிந்திடல் வேண்டும்' என்று வழி காட்டுகிறது.

(18) ''இந்த இந்து வேதம்தான் 'அருளுலக பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி என்ற நான்கு நிலைகளுக்காக மானுடர் அவரவர் விருப்பம் போல், வசதி வாய்ப்பு போல், அருளுலகில் செயல்பட்டிடக் கால் மடக்கிக் கைகட்டிக் கண்மூடி அமர்ந்து வாய் மூடிக் கடவுளரையே பக்தி செய்யும் 'திருமுறை' என்ற ஒரு முறையையும்; பக்தியாளர் தன் விருப்பப்படியும், வசதி வாய்ப்புப்படியும், கிழங்கு, தண்டு, இலை, பூ, காய், கனி, பயிறு, கூலம்.... முதலிய பயிரினங்களை அப்படியே படையலாக இட்டோ! அல்லது சமைத்துப் பக்குவப்படுத்தியோ, படையலிட்டோ, பத்தி செய்யும் 'தருமுறை' என்ற ஒரு முறையையும்; பக்தியாளர் தம் விருப்பப்படியும், வசதி வாய்ப்புப்படியும், தான் பெரிதும் விரும்பி உண்ணக்கூடிய மீன், ஆடு, கோழி, புறா ...முதலியவற்றைப் பலியிட்டுச் சுவைகரமாக மட நூல் விதிப்படி சமைத்து படையலிட்டு பக்தி செய்யும் 'கருமுறை' என்ற ஒரு முறையையும்; பக்தியாளர் தம் விருப்பம் போல் வசதி வாய்ப்புப் போல் தமக்கேற்ற குருவைத் தேர்ந்தெடுத்து; அவருடனேயே வாழ்ந்து; அவருக்கு அணுக்கத் தொண்டு செய்வதையே கடவுளிடம் பக்தி செய்யும் முறையாகக் கருதும் 'குருமுறை' என்ற ஒரு முறையையும் தெளிவாக விளக்கியுரைத்து நான்கு வகையான பக்தி முறையினை வழங்குகிறது.

(19) ''இந்த இந்து வேதம் தான், 'மானுடர் தம் விருப்பம் போல்; தமக்கு விருப்பமான திசையில் தமது கடவுளரின் கோயிலை அமைத்து வழிபாடு செய்யலாம் என்று கூறுவதோடு; கோயிலுக்குச் செல்ல இயலாதவர் அக்கோயில் இருக்கின்ற திசையைப் பார்த்துத் தமது பக்தியைச் செலுத்தலாம் என்றும் கூறுகிறது''.

(20) இந்த இந்து வேதம் தான்; 'கடவுளைக் கண்டவராலேயே; கடவுளரின் அனைத்து வகையான ஆற்றலினையும், அளப்பரிய அருட்செயல் பலவற்றையும் கடவுளைக் காணாதார் உணரும் பொருட்டுக் கருத்து விளக்கச் சித்திரமாகவும், சிலையாகவும், வடித்து, குடமுழுக்கு முறைப்படி அவற்றிற்கு உயிர்ப்பும், புத்துயிர்ப்பும் வழங்கிச் 'சிலை வழிபாடு', 'கோயில் வழிபாடு' என்று

ப தனைனைத் துன்புறுத்தல் தவம் ஆகாது. முன்னைத் தவத்தால் பெற்றது இப்பிறப்பு
தன்னை ஒறுத்தல் வெறுத்தல் மறுத்தல் பின்னைப் பிறவிக்கு ஊறு பயக்காதோ

வளர்ந்துள்ளன. எனவே, பூசை செய்வதற்குரிய சித்திரம், சிலை, பிற வடிவமைப்பு ... முதலியவை கடவுளாகவே இருக்கின்றன என்பதை உணர்ந்து; அவற்றுக்கு நீராட்டல், ஆடையணிகலன்கள் அணிவித்தல்; நறுநாற்றப் புகை, பூச்சு, சாத்துபடி செய்தல்; மடநூலின் சாத்தர, சாத்திர, சாத்திற வகைப்படி உணவும் பொருள்களைப் பக்குவமாக வகைவகையாகச் சமைத்துப் படையலிடுதல்; கோயில் வளாகத்தில் பாடல், ஆடல், கூத்து, நாடகம், பிற கேளிக்கை, வேடிக்கை நிகழ்த்துதல்;... முதலியன அனைத்தும் கடவுளரால் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளப்படுவனவேயாகும்'' என்று மிகத் தெளிவாக மானுடர் கடவுளரோடு தொடர்பு கொள்ளும் முறை பலவற்றையும் விளக்குகிறது.

(21) ''இந்த இந்து வேதம் தான்; இவ்வுலகில் இயற்கையாகவே திருக்கல், தருக்கல், கருக்கல் என்று மூன்று வகைக் கடவுளர் கணக்கற்றுத் தோன்றுவது போலவும்; குருக்கல் எனும் கடவுளர் அருளாளரால் கணக்கற்றுத் தோற்றுவிக்கப்படுவது போலவும்; காற்று, கருப்பு, பேய், பிசாசு எனும் நால்வகையினரும இயற்கையாகவே தோன்றுகின்றனர் என்றும்; இவர்களில் 'பேய்' அல்லது 'ஆவி' எனப்படும் ஒரே வகை மட்டும் இருக்கின்ற அல்லது இறக்குர் படி செய்யப் படுகின்ற எல்லா வகை உயிரினத்திலிருந்து தோன்றுகின்றது'' என்றும் மிகத் தெளிவாக அருளுலகத்தைப் பற்றி கூறுகிறது.

(22) ''இந்த இந்து வேதம் தான் அருளுலகில் நல்லவராகக் கடவுளர், வழிபடு நிலையினர், தெய்வம், தேவர் என்ற நான்கு வகையினரும்; அல்லவராகக் காற்று, கருப்பு, பேய், பிசாசு என்று நால்வகையினரும் இருக்கின்றனர்'' என்ற பேருண்மையை விளக்குகிறது.

(23) 'இந்த இந்து வேதம் தான்; இவ்வுலக வாழ்க்கையில் அல்லவர் எனப்படும் காற்று, கருப்பு, பேய் பிசாசு எனும் நால்வரால் நோய், நொடி, தொல்லை, துன்பம் .. முதலியவை ஏற்படும் போது; அவற்றிலிருந்து மானுடரைக் காப்பதற்காகவே நல்லவர் எனப்படும் கடவுளர், வழிபடு நிலையினர், தெய்வம், தேவர் எனும் நால்வரும் உள்ளார்கள் இந்நால்வரையும் உதவிக்கு அழைத்துத் துணையாக்கிக் கொண்டு உலகெலாக நல்வாழ்வு, வாழுவதற்குரிய வழிவகையினைக் கணக்கற்றுக் கூறுகிறது. இப்படி இந்து வேதம் கூறுகின்ற வழிவகையனைத்தும்; இந்த உலகில் தோன்றக்கூடிய எல்லா மொழியினருக்கும், இனத்தாருக்கும், நாட்டாருக்கும் உரியனவேயாம்' என்று இந்து வேதம் கூறுகிறது.

(24) இந்த இந்து வேதம் தான், இந்த உலகில் தோன்றக்கூடிய மொழியினர் அனைவரும், தம்முடைய மொழியின ஒலி நயத்திற்கேற்ப ஒலியைச் சரிசெய்து கொண்டு ஓதுதற்குரிய பூசை மொழி வாசகத்தைக் கணக்கற்று வழங்குகிறது. இவற்றின் ஒலிநயம் கெடாமல் எந்த மொழியினர் ஓதினாலும் பெருமளவு பயன் கிடைக்கும் என்று கூறுகிறது. இதனால் தான், இந்த இந்து வேதம் இம்மண்ணுலகில் தோன்றக்கூடிய அனைத்து வகைப்பட்ட இனத்து மானுடருக்கும் பொதுவான ஒன்று என்று இந்து வேதத்தாலேயே கூறப்படுகிறது.

(25) இந்து வேதம் தான், 'அருளுலகின் முப்பெரும் உண்மை', 'அருளுலகின முக்கோணச் சக்திபீட பேருண்மை', என்று தலைப்பிட்டு. ஒரு மொழிக்குரிய கடவுளர்; அவருடைய மொழியினருக்கு மட்டுமே உதவுவர்.(2) ஒரு நாட்டுக்குரிய கடவுளர்; அவருடைய நாட்டவர்கே உதவுவர். (3) ஓர் இனத்துக்குரிய கடவுளர்; அவருடைய இனத்தவருக்கு மட்டுமே உதவுவர் என்பதால் எல்லாருமே அவரவர் பிறப்பால் அமையும் தாய் மொழிக்குரிய கடவுளரையும்; தாய் நாட்டுக்குரிய கடவுளரையும்; தாய் வழி இனத்துக்குரிய கடவுளரையும் மட்டுமே போற்றிப் பேணி பூசை செய்து, வழிபாடு செய்து, வணங்கி, கும்பிட்டு, வாழ்த்திப் பணிந்து, பயனடைய முடியும்; பயனடைய வேண்டும் என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது.

(26) ''இந்த இந்து வேதம் தான்; மனிதர் கடவுளாவதற்குரிய பூசை மொழியை வழங்குகிறது''.

(27) இந்த இந்து வேதம் தான் கடவுளர்; மானுடரைக் கடவுளாக்குவதற்காகவே பாடுபடுகிறார்கள். அதற்காகவே இந்துக் கோயில்கள்

அனைத்திலும் பல கடவுளர் வாழ்கின்றனர். எனவேதான் (1) 'கோயில் அனைத்தும் மானுடரைக் கடவுளாக்கும் பயிற்சிப்பள்ளி' (2) கோயில் அனைத்தும் கடவுளர் அருட்கல்வி அளிக்கும் குருகுலமே' (3) கடவுளர் அனைவருமே பூசாரியாக, குருவாக, குருமாராக, குருதேவராகச் செயல்படுகின்றனர் என்று பல அரிய, பெரிய உரிய தத்துவத்தை வெளியிடுகிறது இந்து வேதம்.

(28) இந்த இந்து வேதம் தான்; கடவுளர் போல் மானுடரும் இயற்கையாகத் தோன்றுகின்றனர்; மறைகின்றனர்; தோற்றம், மறைவற்றும் வாழுகின்றனர். அதாவது மானுடருக்குப் பிறப்பு, இறப்பு, பிறப்பிறப்பற்ற பெருநிலை என்ற மூன்று நிலை இருப்பது போலவே கடவுளருக்கும் உண்டு. ஆனால் வாழும் கால அளவு தான் வேறுபட்டிடும். எனவே கடவுளரும், மானுடரும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு நட்பையும், தோழமையையும் வளர்த்து வாழ வேண்டும் என்று கூறுகிறது.

(29) ''இந்த இந்து வேதம் தான்; கடவுளருக்கு அருவ நிலை, அருவுருவ நிலை, உருவ அருவ நிலை, உருவ நிலை என்ற நான்கு நிலையிருப்பதால், அவரவர் விருப்பப்படி பிறர் காண வாழ்ந்து; எதையும் இட்டு, தொட்டு, சுட்டி, ஆண்டு அனுபவித்து வாழ முடியவில்லை. அதனால் (1) 'மானுடப் பிறப்பே புனிதப் பிறப்பு' (2) 'மானுடப் பிறப்பே உய்வுக்குரிய பிறப்பு' (3) மானுடப் பிறப்பே துய்ப்புக்குரிய அரிய பிறப்பு'... என்று கூறுகிறது.

(30) இந்த இந்து வேதம் தான்; 'கடவுளரும் மானுடராய்ப் பிறப்பெடுக்கவே பெரிதும் முயலுகின்றனர்' என்று கூறுகிறது.

(31) இந்த இந்து வேதம் தான்; மானுடருக்கு உதவிடத் திருத் தோற்றமளிக்கும் கடவுளரும்; நேரில் வரும் கடவுளரும்; மானுடராய்ப் பிறப்பெடுக்கும் கடவுளரும் இம்மண்ணுலகிலே பெரிதும் தங்கிடுகின்றனர். அதுவும், (1) 'அதிக அளவில் கடவுளர் தமிழகத்தில்தான் பிறந்திருக்கின்றனர்; பிறந்து கொண்டிருக்கின்றனர் பிறப்பெடுக்கப் போகின்றனர்' (2) 'அதிக அளவில் கடவுளர் தமிழராகத்தான் பிறந்திருக்கின்றனர், பிறந்து கொண்டிருக்கின்றனர் பிறப்பெடுக்கப் போகின்றனர்' (3) 'அதிக அளவில் கடவுளருக்கு தெரிந்தது அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழிதான். ஏனெனில், என்றென்றும் எல்லாக் கடவுளரும் அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள 'இந்து வேதம்' ஒன்றை மட்டுமே படித்துக் கொண்டிருக்கும் நிலைதான் அருளுலகில் இருக்கின்றது; இருந்திடும்' என்று கூறுகிறது.

(32) ''இந்த இந்து வேதம் தான்; கடவுளர் மானுடருக்குத் தந்தையாக, தாயாக, தோழராக, நண்பராக, தொண்டராக, சேவகராக, அடிமையாக நேரில் வந்து உதவி செய்து காப்பாற்றக் காத்திருக்கின்றனர். ஆனால், மானிடர் இந்து வேத வழியாகக் கடவுளரோடு தொடர்பு கொள்ளத் தெரியாதவராக, புரியாதவராக வாழுவது தான் உலகியலாக இருக்கிறது'' என்று கூறுகிறது.

(33) ''இந்த இந்து வேதம் தான்; இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும்; இந்து மதத்தை இம்மண்ணுலகில் உருவாக்கிய பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதியுமான அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரே காலந்தோறும் மானுடருக்கு இந்து வேதத்தின் அருமை, பெருமை அரிய பயன் முதலியவற்றை விளக்கி மானுடர் இந்து வேத வழியில் மெய்யான உய்வு பெற வழி செய்கின்றனர்.

(34) இந்த இந்து வேதம்தான், ஆவி, ஆன்மா, ஆருயிர் எனும் மூன்றும் இணைந்து உருவாகும் சோதியின் விளக்கமாக **குறியீடாக, இலக்காக** 'இலிங்க வடிவம்' உருவாக்கப் பட்டுள்ளது. இந்த 'இலிங்க வடிவம்' ஆண்மை நிலை, பெண்மைநிலை, இந்த இரண்டும் கலந்த (அ) கலந்த அலி நிலை; என்று மூன்று வகைப் படும். அதாவது அலி நிலைக்குரியது 'லிங்க வடிவம்' எனப்படும். ஆனால் இந்த லிங்க வடிவத்தை நிலைநிறுத்தும் வடிவ அமைப்புக்கேற்ப **ஆண்மை நிலைக்குரியதை 'சிவலிங்கம்'** (சிவம்+லிங்கம்) என்றும்; **'பெண்மை நிலைக்குரியதை சத்தி லிங்கம்'** (சத்தி+லிங்கம்) என்றும்; **'அலி நிலைக் குரியதை 'லிங்கம்'** என்றும் மூன்று வகை லிங்க வடிவம் போற்றிப் பேணிப் பணிந்து, பூசை செய்து மானுடர் பயனடைய வழங்கப்பட்டுள்ளன'' என்று கூறுகிறது.

(35) இந்த இந்து வேதம் தான்; மானுடர் பாலுகர்பருவம் முதல் பதினெட்டு வயது வரை செய்யும் உடற்பயிற்சி என்றும்; பதினெட்டு வயது முதல் முப்பத்தாறு வயதுவரை செய்யும் உடற்பயிற்சி என்றும் முப்பத்தாறு வயது முதல். ஐம்பத்து நான்கு வயது வரை செய்யும் உடற்பயிற்சி என்றும் மூன்று வகைப்பட்ட உடற்பயிற்சி வகையினையும், பயிற்சி செய்யும் கால அளவினையும், கூறுகிறது. இத்துடன் ஐம்பத்து நான்கு வயதுக்கு மேல் நடப்பது மட்டுமே போதுமென்று கூறுகிறது.

(36) 'இந்த இந்து வேதம் தான்' பல்வேறு வகையான நோய் பற்றியும், காயசுத்தி, காயசித்தி, காயகல்பம், ககனகுளிகை, அமுதம், நச்சுமுறி நவநஞ்சுச் சூரணம் பல் துலக்கும் தூள் பசிய இலை வேர் பட்டை குச்சி....முதலியவை பற்றி நிறைய செய்தி வழங்குகிறது.

(37) இந்த இந்து வேதம் தான்; மானுடரின் முற்பிறப்பு இப்பிறப்பு மறுபிறப்பு முதலியன பற்றியும்; மானுடரில் மனித மனத்தின் மென்மையே இல்லாத அரக்கர் நிலையினர் விலங்கு நிலையினர்; பேய் நிலையினர்; வேதத்தையும் கடவுளையும் வெறுப்பவர் மறுப்பவர் எதிர்ப்பவர் துறபபவர் மறப்பவர்... முதலியோர் மனித மனத்தின் மென்மையின் விளக்கமான அன்பாளர் பண்பாளர்; வேதத்தையும் கடவுளையும் மிகுதியாக விரும்பிடும் பக்தியாளர்.... எனப்படும் பல்வேறு வகையினர் தோற்றம் தோற்ற மாற்றம் மாற்றஏற்ற இறக்கம் இன்பத்துன்பம் இழிவழிவு.... முதலியவை அனைத்தையும் தக்க சான்றும் ஊன்றும் காரணகாரியமும் வழங்கி விளக்குகிறது... என்று இந்த அளவில் பதினெண் **சித்தர்கள் அண்ட பேரண்ட மானுடர் அனைவரும்** ஒறுமையுடனும் நட்புடனும் தோழமையுடனும் அன்புடனும் நிறைவுடனும் நிம்மதியுடனும் சமத்துவப் பற்றுபாச நேசத்துடனும் எதையும் பகிர்ந்துண்டு கூடி வாழும் போக்குடனும் அமைதியான வாழ்வு வாழ்வதற்காக (1) மானுடரின் விழியாக (2) மானுடரின் வழியாக (3) மானுடரின் வழிகாட்டியாக (4) மானுடரின் வழித்துணையாக (5) மானுடரின் வழிப் பயனாக அருளப்பட்டுள்ள இந்து வேதக் கருத்துப் பற்றிய விளக்கப்பட்டியல் நிறைவு செய்யப்படுகிறது.

**1** இன்றைய தமிழகத்தின் நிலை தென்னிந்தியாவின் நிலை இந்தியாவின் நிலை ஆசியாக் கண்டத்தின் நிலை ஐந்து கண்டங்களும் சேர்ந்த உலகின் நிலை முதலியவை அனைத்தையும் பொறுப்போடும் பொறுமையோடும் நிதானத்தோடும் முறையாக ஆராய்ந்து பார்த்து எடுக்கப்பட்ட முடிவின் பயனாகவே 'இந்து வேதம்' மீண்டும் பன்னிரண்டாவது முறையாக இந்து வேத இந்து மதத் தலைமை ஆச்சாரியக் குருபீடத்தால் வெளியிடப்படுகின்றது. இதில் எந்தவிதமான குறுகிய மதவெறியோ! மதப் போட்டாப் போட்டி பொறாமையோ! ...இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை.

**2** குவலய குருபீடமான ஞாலகுரு பரப்பிரம்மம்; அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளார் குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் 'உலக மதவெறிகளை அகற்றி மதநெறிப் போக்கு தழைத்திட வேண்டும்' என்பதற்காகவே; 'இம்மண்ணுலகின் முதல் வேதம், முழுமையான வேதம, அனைத்து மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட வேதம்' 'கடவுளர்களாலேயே காலங்கள் தோறும் புதுப்பித்து எழுதித் தரப்படும் வேதம், கடவுளர்களுக்கும் மானுடர்களுக்கும உய்வுக்குரிய மெய்யான தொடர்புகளை உருவாக்கித்தரும் வேதம், எண்ணற்றோர் தொடர்ந்து கடவுளைக் கண்டு அருளாற்றல் பெற்று அருட்பயன்களை மக்களுக்கு வாரி வாரி வழங்குகின்ற வேதம், பகுத்தறிவுப் பூர்வமாக எல்லோரும் புரிந்து ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பிண்டம் அண்டம பேரண்டம் அண்ட பேரண்டக் உலகின் தோற்றம் பயிரின உயிரினத் தோற்றம் மானுட இனங்கள் மொழிகள் நாடுகள் முதலியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும், முற்பிறப்பு மறு பிறப்பு இப்பிறப்பு பிறப்பு இறப்பு கடவுளர் வகை கடவுளர் உலகு, கடவுளர் வாழ்வியல், கடவுளர்களுக்கும் மானுடர்களுக்குமிடையே உள்ள உறவு முறையும் உரிமை முறையும்; கோயில் வகை, பூசை வகை, அருளாளர் வகை, தனி மனித வாழ்வியல், குடும்ப வாழ்வியல், சமு

தாய வாழ்வியல், அரசியல் வாழ்வியல், சமய வாழ்வியல்.... முதலிய இன்னோரன்ன பிற அனைத்தையும் விளக்குகின்ற வேதம் ...என்று பல சிறப்புகளையும், தனித்த பெருமைகளையும், தன்னிகரற்ற உரிமைகளையும் பெற்றுத் திகழும் வேதமான 'இந்து வேதத்தை' வெளிக் கொணரும் பணியைத் துவக்கியுள்ளார். இதனைப் புரிந்து உலகோர் செயல்பட்டுப் பயனடைதற்கு விடுக்கும் அழைப்பாகவே இந்த 'இந்து வேத முன்னுரை' வெளியிடப்படுகிறது.

ஓ இந்த இந்து வேதம் (1) **"தமிழர்கள் தான் அருளுலகின் மூலவர்கள், நாயகர்கள், காவலர்கள், வாரிசுகள், வித்துக்கள், சொத்துக்கள்"** என்றும், (2) "தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும் தான் அருளுலகின் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், நாற்றங்கால்கள்" என்றும்; (3) 'தமிழினமே அண்ட பேரண்ட அருளாட்சி புரியும் பதினெண் சித்தர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அருளினம்' என்றும்; (4) 'தமிழகம் தான், அண்ட பேரண்டங்களிலிருந்து பதினெண் சித்தர்கள், பதினெட்டாம் படி கருப்புகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்கள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள்.... முதலியோர் முதன் முதல் வந்து தங்கி; 'அருளுலகின தாயகமாக பிறப்பிடமாக காப்பிடமாகத் தமிழகமே என்றென்றும் விளங்கட்டும், செயலாகட்டும், நிலைபேறு பெறட்டும்' என்று வாழ்த்தியுள்ளனர் என்றும், (5) தமிழ் மொழியே என்றென்றும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியாக விளங்கட்டும் என்றும், (6) "தமிழ் மொழியே கடவுளர் மொழி, தெய்வ மொழி, தேவ மொழி என்றும், (7) 'தமிழ் மொழியே எல்லா வகைப் பட்ட கடவுளர்களையும், மனிதரைத் தேடி வந்து உதவி செய்யும்படி செய்யும் ஆற்றலுடை ஒரே ஓர் ஒப்புயர்வற்ற 'அருள் மொழி' என்றும், (8) "தமிழ் மொழியே எல்லா வகைப்பட்ட மனிதரும் எல்லா வகைப்பட்ட கடவுளரையும் தேடிச் சென்றோ! அல்லது தங்களிருப்பிடத்திற்கு வரவழைத்தோ சந்தித்திட உதவி செய்யும் பேராற்றலுடைய ஒரே ஓர் அரிய 'அருள் மொழி' என்றும், (9) "தமிழ் மொழியிலிருந்து தான் இம்மண்ணுலகின் மொழிகள் அனைத்தும் தொடர்ந்து தோன்றிக் கொண்டிருக்கின்றன என்பதால் எல்லா மொழியின் ஒலிகளிலும் தமிழ் மொழியின் அருளொலி கணிசமான அளவாவது இருக்கின்றது. எனவே இந்து வேத வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும் உலக மொழியினர் தமிழில் ஒலிப்பது போல் திருத்தமாக ஒலிக்கும்படி செய்தால், உலக மொழியினர் அனைவரும் அருட்செல்வத்தைத் துய்த்து உய்வு பெறமுடியும்" என்றும், மிகமிகத் தெளிவாக எளிமையாகக் கூறுகிறது. எனவே,

**தமிழ் மொழியில் அறிவும், புலமையும், சொல்லாற்றலும், ஆழ்ந்த ஈடுபாடும்... உடைய 'தமிழாசிரியர்' அனைவரும் தங்களை இந்து வேத ஆச்சாரியாராக ஆக்கிக் கொள்ள வேண்டும்! ஆக்கிக் கொண்டேயாக வேண்டும்!**

தமிழாசிரியர்கள், இந்து வேத ஆச்சாரியார்களாகத் தயாரானால் தான் அருளாற்றல் ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடச் செய்யும் தமிழ் மொழியின் **'எழுத்தொலிகளையும், சொல்லொலிகளையும், சொற்றொடர் ஒலிகளையும்'... முழுமையான** ஒலி நயத்தோடு; எள் முனையளவுகூட ஒலி நயம் சிதையாமல், பிசிறடிக்காமல், குறையாமல், மாறாமல் ஒலித்து, இந்து வேத ஒலியால் எங்கும் அருட் பயன் முழுமையாக விளைந்து; எல்லா மொழியாரும், இனத்தாரும், நாட்டாரும், நன்மை அடையும்படி செய்ய முடியும்! செய்ய முடியும்!! செய்ய முடியும்!!! மேலும், தமிழாசிரியர்களே! இந்து வேத ஆச்சாரியாகத் தயாரானால்தான்; இந்து வேதத்தில் பொருளாழமிக்க பழந்தமிழ்ச் சொற்களுக்கும்; சொற்றொடர்களுக்கும் உரிய உண்மையான, முழுமையான, நேரடியான .. பொருளை ஆராய்ந்தறிந்து எல்லா மொழியினருக்கும், எல்லா இனத்தாருக்கும், எல்லா நாட்

டாருக்கும் விளக்கியுரைக்க முடியும்! முடியும்!! முடியும்!!! ஏனென்றால்,

**'இந்து வேதம் அறிவுக்குப் புறம்பான நம்ப முடியாத கட்டுக் கதைகளையும், கற்பனைக் கதைகளையும், தேவதைக் கதைகளையும், பெற்றிருக்கவில்லை! பெற்றிருக்கவில்லை!! பெற்றிருக்கவில்லை!!! பெற்றிருக்கவே இல்லை. அதனால், தமிழ் மொழியில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும், முதிர்ச்சியும் உடைய தமிழாசிரியர்கள்; தாங்களாகவே விரும்பி இந்து வேத ஆச்சாரியாராகத் தயாரானால் தான் அருளுறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேதம் முழுமையான அளவில் இந்த உலகம் முழுதுமுள்ள எல்லா மொழியினருக்கும் எல்லா இனத்தவருக்கும்; எல்லா நாட்டாருக்கும் அருளுலகப் பயன்களை நல்கி உலக மானுடர் அனைவரும் நலமடையச் செய்ய முடியும்.**

எனவே, தமிழாசிரியர்களே! இந்து வேத ஆச்சாரியாராகத் தயாராகிட முன் வாருங்கள்! முன் வாருங்கள்!! முன் வாருங்கள்!!!

**4** (1) தமிழாசிரியப் பெருமக்களே! 'பதினெண் சித்தர் வழங்கியுள்ள இந்து வேதத்தை மீண்டும் பரப்புவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? இன்றைக்கு யாருக்கு வேதத்திடம் மதிப்பும், நம்பிக்கையும் இருக்கின்றது? அநேகமாக வேதத்தை விரும்புகிறவர்கள், மதிக்கிறவர்கள், போற்றுகிறவர்கள், வேதத்தை வரவேற்கிறவர்கள் யாருமே இல்லை!...' என்று சட்டென்று பதில் கூறத்தான் துடிப்பீர்கள் நீங்கள். உங்களுடைய துடிப்பு நியாயமானதுதான் உண்மையானதுதான். இதற்குப் பதில் சொல்லும் பொறுப்பைப் பதினெண் சித்தர் மடம் ஏற்றுக் கொள்கிறது.

(2) தமிழாசிரியப் பெருமக்களே! இன்றைக்குத் தெற்கேயுள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து; வடக்கேயுள்ள வட இமயத்தின் பனி மூடிய விளிம்புவரை வாழும் இந்திய மக்களிடையில் ஒரே மாதிரியான மதப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், திருநாள்கள், புராணங்கள், கடவுள்கள்.... தான் இருக்கின்றன' இவற்றின் துணையால், வழிகாட்டலால்தான், இந்தத் துணைகண்ட மக்கள் வாழுகிறார்கள். இந்த வாழ்க்கையை **'இந்து மத வாழ்க்கை'** என்று சொல்லுகின்ற வழக்கம் படித்தவர் முதல் படிக்காத பாமரர் வரை பெற்றுள்ளனர். இவற்றுக்கும் மேலாக, இந்த இந்தியத் துணைக் கண்டத்து மக்கள்; தங்களை 'இந்துக்கள்' 'இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்...' என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள்; நம்புகிறார்கள்; வாழையடி வாழையெனத் தொடர்ந்து எழுதி வைத்துள்ளார்கள். அத்துடன், இந்த இந்திய மக்கள் தங்களுடைய இந்து மதத்தின் வேதம் **'இந்து வேதம்'** என்றும் கூறுகிறார்கள். ஆனால் இந்தியாவின் ஆயிரக்கணக்கான மைல் பரப்பளவில் வாழும் பல்வேறு மொழியினருக்கிடையில் எவருக்குமே:-

1. இந்து மதம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
2. இந்து மதம் எப்போது தோற்றுவிக்கப்பட்டது?
3. இந்து மதம் எங்கே? எந்த இடத்தில் தோற்றுவிக்கப்பட்டது?
4. இந்து மதத்தின் வேதமான இந்து வேதம் எந்த மொழியில் வெளியிடப்பட்டது?
5. 'இந்து வேதம்' ஏன் முழுமையான வடிவில் இந்துக்களிடம் இல்லை?
6. இந்து வேதத்துக்குரிய வேதியர், சாத்திரியார், தோத்திரியார் பரம்பரைகள் என்னவாயின?
7. இந்து வேதத்தைத் தோற்றுவித்த மடம் என்னவாயிற்று?
8. இந்து மதத்தின் தலைமை ஆச்சாரியார் பரம்பரை என்னவாயிற்று?

9. இந்து மதத்தின் தலைமை ஆச்சாரியார் குரு பீடம் என்னவாயிற்று?

10. இந்து வேதமும், இந்து மதமும் இந்தியத் துணைக் கண்டம் கடந்து பரவினவா?

11. இந்து வேதமும், இந்து மதமும் இந்தியா வுக்குள் மட்டுமே இருப்பது ஏன்?

12. இந்து மதத்தில் மட்டும் 'பிறரை இந்து மதத் துக்கு மாற்றுவது' என்ற கருத்தோ, செயலோ இல்லாமல் போனது ஏன்?

........ ........ ........ ........ ........

........ ........ ........ ........ ........

என்பன போன்ற வினாக்களை எழுப்பி அவற் றிற்கு விடை தேடும் முயற்சி பிறக்கவில்லை! பிறக்கவில்லை!! பிறக்கவில்லை!!!...ஏன்? ஏன்?? ஏன்??? என்று சிந்திக்கும் நிலை இன்று தான் ஏற்பட்டிருக்கிறது? தமிழகத்தில்தான் அந்த வினாக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன? அதுவும் இந்த வினாக்களுக்கு உரிய விடைகளும் தமிழகத் தில்தான் இருக்கின்றன. அதுவும்,

**இந்தியத் துணைக் கண்டத்து மொழி களுக்கு மட்டுமன்றி உலக மொழிகளுக்கெல் லாம் 'மூல மொழியாக', 'கரு மொழியாக', 'தாய் மொழியாக'... உள்ள தமிழ் மொழியில் தான் மேற்படி வினாக்களுக்கெல்லாம் உரிய விடைகள் இருக்கின்றன.**

எனவேதான், தமிழில் புலமையும், ஆர்வ மும் உடைய தமிழாசிரியப் பெருமக்கள் இந்து வேத ஆச்சாரியாராகி இந்து வேதத்தை இந்தியத் துணைக்கண்டம் முழுதும் மட்டுமன்றி, உலகம் முழுதும் விளக்கியுரைக்க வேண்டும்.

**அதாவது, தமிழில் உள்ள இலக்கியங்கள் அனைத்துமே; உலக மக்கள் அனைவருக் குமே அறிவுரை கூறும் வண்ணம்தான் எழுதப் பட்டுள்ளன என்பதைத் தமிழர்களே தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் இருப்ப தால் தான்; தமிழரின் தத்துவம், சித்தாந்தம், பண்பாடு, நாகரீகம்... முதலியவை தமிழர்களா லேயே விரும்பி ஏற்றுப் போற்றப்படாத நிலை உருவானதுபோல: இந்து வேதம் தமிழர்களா லேயே தெரிந்து போற்றிப் பேணப்படாததால் தான்; 'தமிழர்களே' 'இந்து மதம்' தங்களுடை யது 'இந்து மதம் தங்களின் முன்னோரால் தான் தோற்றுவிக்கப்பட்டது': 'இந்து வேதம் தங்களுடைய தாய்மொழியான தமிழ் மொழி யில்தான் இருக்கின்றது...** என்று பதினெண் சித்தர் மடம் எடுத்துக் கூற முன் வந்துள்ளது.

(3) தமிழாசிரியப் பெருமக்களே! **'தமிழ ரின் அகப்பண்பாடும் புறநாக ரீகமும்தான் இந்து மதம்'** என்ற பேருண்மை முதலில் தமிழர்களுக்குத் தெரிந் தாக வேண்டும்; புரிந்தாக வேண்டும். அப் பொழுதுதான், தமிழ் மொழியும், தமிழிலக்கிய மும் முறையாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்திடும் நற்காலம், பொற்காலம் உரு வாகிடும்! உருவாகிடும்!! உருவாகிடும்... அதற்காக தமிழாசிரியப் பெருமக்களே இந்து வேத ஆச்சாரி யாராகுங்கள்.

(4) தமிழாசிரியப் பெருமக்களே! 'சங்க இலக்கி யங்கள்' 'பதினெண் மேல் கணக்கு நூல்கள்' பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்....என்று பூரிப் போடும் பெருமையோடும் குறிப்பிடப்படும் இலக்கி யங்களின் நோக்கும் போக்கும் ஊக்கும் 'உலக பொதுமை, உலகச் சமத்துவம், உலகச் சகோதரத் தத்துவம், உலக அமைதி, உலக ஒற்றுமை, உலக சமாதானம், யாதும் ஊரே யாவரும் உறவினரே' எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும்... என்று பரந்து விரிந்த கருத்தினைப் பெற்றிருப் பதற்கு காரணமே இந்து வேதம் தான்! இந்து வேதம் தான்!! இந்து வேதம் தான்!!! என்ற பேருண்மையை உணருங்கள். அதன் பிறகாவது தமிழிலக்கியங்களின் மூலமாகவும் கருவாகவும் தாயாகவும் அடிப்படையாகவும் இருக்கின்ற இந்து வேதத்தைப் பரப்பித் தமிழ் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காத்திடும் இந்து வேத ஆச்சாரி

வாருங்கள். தமிழாசிரியர்களால் தான் இந்து வேதத்தைப் பரப்பி பாதுகாத்திட முடியும் தமிழாசிரியர்களால் தான் இந்து மதத்தைப் பேணிப் பாதுகாத்திட முடியும். தமிழாசிரியர்களால்தான் இந்து மதத்துக்குரிய இலக்கியச் செல்வங்கள் அனைத்தையும் இந்துக்கள் நன்கு தெரிந்து புரிந்து பயன்படுத்தி அரிய பெரிய நன்மைகளை அடைந்திட முடியும்... இப்பேருண்மைகளை நன்கு எண்ணிப் பார்த்தாவது தமிழாசிரியர்களே பெருவிருப்பத்தோடும் ஆழ்ந்த நம்பிக்கையோடும் இந்து வேத ஆச்சாரியாராகிட முன் வாருங்கள்.

(5) தமிழாசிரியப் பெருமக்களே! பதினெண் சித்தர் மடம் தான், இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளியது. இந்த இந்து வேதம் நான்கு உகங்களாக (யுகங்களாக) வாழ்ந்து வருகிறது. இந்த இந்து வேதத்தின் மூலம் தான் (1) 'தமிழ் மொழியே அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி' (2) 'தமிழ் மொழியில்தான் இந்து வேதத்தின் முன்னூற்றுத் தொண்ணூற்றாறு (396) நூல்களும் இருக்கின்றன' (3) 'தமிழ் மொழியும், தமிழரும் சிறப்பாக வாழ ஆரம்பித்து நாற்பத்து மூன்று லட்சத்து எழுபதது மூவாயிரத்து தொண்ணூற்று நான்கு (4373094) ஆண்டுகள் இந்த (1993 முடிய) ஆகின்றன' (4) 'தமிழ் மொழியே உலகம் முழுதும் பரவியிருந்த ஒரு மொழி (5) 'தமிழ் மொழியிலிருந்துதான் உலக மொழிகள் அனைத்தும் தோன்றின' ..முதலிய பல அரிய, பெரிய பேருண்மைகள் அறியப்படுகின்றன; உலகுக்குத் தெரிய வருகின்றன. இப்படித் தமிழ் மொழியின் பெருமையையும், உரிமையையும், தமிழரின் பெருமையையும் உரிமையையும் மிகத் தெளிவாக உலகுக்கு அறிவிக்கும் இந்து வேதத்தைப் பரப்பிடத் தமிழாசிரியர்களே! உங்களைத் தவிர வேறு யாரை இந்து வேத ஆச்சாரியராகும்படி அழைக்க முடியும்?! அழைக்க முடியும்!? அழைக்க முடியும்?!

(6) தமிழாசிரியப் பெருமக்களே! இன்றைக்கு எல்லா நாடுகளிலுமே உள்நாட்டுக் குழப்பங்கள், கலவரங்கள், சண்டை சச்சரவுகள், போர்கள் நிகழுகின்றன. இவற்றோடு பெரும்பாலும் எல்லா நாடுகளுமே அண்டை அயல் நாடுகளுடன் போர் நிகழ்த்தத் தயாராகிக் கொண்டே இருக்கின்றன. இவற்றின் உச்சக் கட்டமாக உலக நாடுகளே இருபெரும் பிரிவாகி உலகப் போரை நிகழ்த்த தயாராகிக் கொண்டிருக்கின்றன. 'இப்படிப்பட்ட சூழ்நிலையில் உலகுக்கே வழிகாட்டும் வல்லமையும், நல்ல வளமும் தமிழர்களுக்குத் தான் இருக்கின்றது என்ற பேருண்மையை நிலை நாட்டிடத் தமிழ் மொழியிலுள்ள இந்து வேதத்தைத்தான் உலகம் முழுதும் அறிவிக்க வேண்டும். ஏனெனில், உலக மக்கள், இந்து வேதத்தைத் தெரிந்து, புரிந்து, ஆராய்ந்தறிந்து உணர்ந்திட்டால் தான் இந்து வேத வழியில் தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு அரசியல் வாழ்வு எனும் நான்கு வகை வாழ்வும் வெறியற்ற அன்பும் பண்பும், அமைதியும், நிறைவும் நிம்மதியும், இனிமையும் விளைகின்ற நல்ல நெறிப்பட்ட வாழ்வாக மாறிடும்! மாறிடும்!! மாறிடும்!!! மாற்றப்பட்டிடும்! மாற்றப்பட்டிடும்!! மாற்றப்பட்டிடும்!!! அப்படிப்பட்ட மாபெரும் சாதனையைச் சாதித்த பெருமை தமிழாசிரியருக்குக் கிடைக்க வேண்டும்! கிடைக்க வேண்டும்!! கிடைக்க வேண்டும்!!! கிடைத்தாக வேண்டும்! கிடைத்தாக வேண்டும்!! கிடைத்தாக வேண்டும்!!! கிடைத்தேயாக வேண்டும்! எனவே, தமிழாசிரியப் பெருமக்களே! தங்களுடைய தமிழ்த் தொண்டோடு தொண்டாகச் சேர்த்து 'இந்து வேதம் பரப்பும் பணியையும்' நீங்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அதற்காகத் தமிழாசிரியப் பெருமக்கள் அனைவரும் இந்து வேத ஆச்சாரியார்களாக தயாராகியே தீர வேண்டும்! தயாராகியே தீர வேண்டும்!! தயாராகியே தீர வேண்டும்!!!

(7) தமிழாசிரியப் பெருமக்களே! அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளுறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேதத்தில் தான (1) 'தனி மனித வாழ்வின் விடுதலை' ( ) 'குடும்ப வாழ்வின் விடுதலை' (3) 'சமுதாய வாழ்வின் விடுதலை' 4) 'அரசியல் வாழ்வின் விடுதலை' (5) 'மொழியின் விடுதலை' (6) 'இனத்தின் விடுதலை' (7) 'நாட்டின் விடு

தலை' (8) 'மதத்தின் விடுதலை'....என்று கூறப்படும் எட்டு வகையான விடுதலையுணர்வும் வாழ்வும் வடிவம்படுத்திக் காட்டப்படுகின்றன. அதாவது **'மனித வாழ்வில் விடுதலையுணர்வு'** எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் பிழைத்திருக்க வேண்டும்; தழைத்திருக்க வேண்டும் என்று இந்து வேதம் கூறுகிறது. இப்படிப்பட்ட 'இன்றமிழ் இந்து வேதத்தை', 'செந்தமிழ் இந்து வேதத்தை', 'பைந்தமிழ் இந்து வேதத்தை', 'ஒண்டமிழ் இந்து வேதத்தை', 'வண்டமிழ் இந்து வேதத்தை', 'தீந்தமிழ் இந்து வேதத்தை' 'மென்றமிழ் இந்து வேதத்தை', 'அழகுத்தமிழ் இந்து வேதத்தை', 'அமுதத் தமிழ் இந்து வேதத்தை', 'அருட்டமிழ் இந்து வேதத்தை', 'அன்புத் தமிழ் இந்து வேதத்தை', 'அறிவுத் தமிழ் இந்து வேதத்தை', 'அன்னைத்தமிழ் இந்துவேதத்தை',... இந்துவேத வித்துக்களான தமிழாசிரியப் பெருமக்கள் தான் உலகம் முழுதும் பரப்பிட முன்வரவேண்டும். இதற்காகத்தான் தமிழாசிரியப் பெருமக்களே, விரைந்து இந்து வேத ஆச்சாரியராகத் தயாராகிட முன்வாருங்கள். அதுதான் நீங்கள் தமிழுக்கும், உலக மானுடருக்கும் ஆற்றும் மாபெரும் தொண்டு!

7. தமிழாசிரியப் பெருமக்களே! (1) 'இந்த உலகில் தோன்றிய முதல் பெருநிலப்பரப்பான இலமூரியாக் கண்டம், பல்லாயிரம் கல் பரப்பளவு உடையதாக இருந்ததையும்; (2) அப்பெரு நிலப் பரப்பில் முதல் இனமாகத் தோன்றிய தமிழினத்தவர் மட்டும் அல்லாமல் பலவேறு மொழிவழி இனமக்களும், நாட்டினரும் தோன்றினர் என்பதையும்; (3) மூன்று முறை கடல்கோள்களால் இம்மண்ணுலகு மிகப்பெரிய அழிவுகளை, இழப்புகளை, புதிய நிலப்பகுதித் தோற்றங்களை... எல்லாம் பெற்றிட்டது என்ற உலக வரலாற்றுச் செய்திகளையும்; (4) இம்மண்ணுலகில் பயிரினங்களின் வாழ்வியல் நிலைகளும், உயிரினங்களின் வாழ்வியல் நிலைகளும், மழை, காற்று முதலிய இயற்கைச் சக்திகளின் செயல் நிலைகளும், இந்த உலகைச் சுற்றியுள்ள நாள், கோள், மீன் இராசி முதலியவற்றின் இயக்கங்களுக்கு ஏற்பத்தான் அமைகின்றன என்ற பேருண்மைகளையும் அறிவுபூர்வமாக பகுத்தறிவுக்குரிய முறையில், மிகத் தெளிவான காலக் கணக்கீட்டு அடிப்படையில் விளக்கியுரைக்கின்றது அருளூறு அமுதத்தமிழில் உள்ள இந்துவேதம். அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்த இந்து வேதத்திலதான் வேதத்தில்தான நான்கு உகங்களுக்கும (யுகங்களுக்கும்) உரிய நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்துத் தொண்ணூற்று நான்கு (43,73,094) ஆண்டு என்று இன்றைய ஆங்கில ஆண்டு (1993) ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று மூன்று என்ற எல்லைவரை உள்ள நெடிய கால இடைவெளியின் கணக்கு இருக்கிறது.

அதாவது,

(i) மனிசர்கள் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த அனாதிக் காலம் : 485,920

(ii) மனிசர்கள் பதினெண் சித்தர்களின் இந்து வேதத்தால் மனிதர்களாக்கப்பட்ட பிறகு முதல் கடல் கோளினால் பேரழிவு ஏற்படும்வரை இருந்திட்ட முதல் உகம் 'கிரேன் உகம்' (கிரேதாயுகம்) : 1728080

(iii) முதல் கடல் கோள் அழிவுக்கும் இரண்டாவது கடல்கோள் அழிவுக்கும் இடைப்பட்ட இரண்டாவது யுகம் 'திரையுகம்' (திரேதாயுகம்) 1290000

(iv) இரண்டாவது கடல் கோளுக்கும் மூன்றாவது கடல் கோளுக்கும் இடைப்பட்ட காலம் 'தூரன்யுகம்' (துவாபரயுகம்) 864000

(v) மூன்றாவது கடல் கோளுக்குப் பிறகு இன்றுள்ள (கலியுகம்) **கலியுகம் உலகம்** பிறந்து இன்றைய ஆங்கில ஆண்டு 1993 உடன் உள்ள காலம் 005094

**குறிப்பு :**

## இந்து வேதம் ஒன்றுதான்

(a) இந்த உலகம் எப்படித் தோன்றிற்று? (b) எப்பொழுது தோன்றிற்று? (c) இவ்வுலகில் பயிரினங்கள் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? (d) அப்படிப் பயிரினங்களும் உயிரினங்களும் தோன்றிய கால அளவும், அவை தோன்றிய முறையும் என்னென்ன? (e) மனிசர்கள் எப்போது எப்படித் தோன்றினார்கள்? (f) இந்த மனிசர்கள் எப்போது? எப்படி? மனிதர்களாக மாறினார்கள்? (g) இந்த மனித இனம் வாழப் போகும் நான்கு யுகங்களின் கால அளவுக் கணக்கீடு என்ன? (h) இந்த நான்காவது யுகமான கலியுகம் எவ்வளவு காலத்துக்குப் பிறகு முடிவுக்கு வரும்? (i) இந்த கலியுக முடிவுக்குப் பிறகும் இந்த உலகம் இருக்குமா? இருக்காதா?.... என்பன போன்ற வினாக்கள் அனைத்துக்கும் மிக மிகத் தெளிவான பகுத்தறிவுப் பூர்வமான, முறையான, நாகரீகமான, நம்பத்தக்க செய்திகள் இந்து வேதத்தில் இருக்கின்றன! இந்து வேதத்தில்தான இருக்கின்றன.

| | |
|---|---|
| இந்தக் கலியுகத்தின் கால அளவு (ஆண்டுகள்) | —4 32 000 |
| ஆனால் இன்று 1993 உடன் கலியுகம் ஆண்டுகள் | 5 094 |
| மீதி ஆண்டுகள் | —4 26 906 |

அதாவது இந்த உலகம் இன்னும் நான்கு இலட்சத்து இருபத்தாறாயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறு.

# அறிவியல் சமயத்தைப் பொய்யாக்குகிறதா?

அன்றி

# மெய்யாக்குகிறதா? (சமயமும் அறிவியலும்)

தொகுப்பு : அருள்மிகு, அருட்போர், வியூக நாயகம், வேம்பை சி.மணி

மின் சத்தி (Electric Power) காந்த சத்தி (Magnetic Power), அணு சக்தி (Atomic Power).... எனறு பல சத்திகள் மேலைநாட்டு விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுத் தொழிற்புரட்சியும், பொருளாதார வளர்ச்சியும், சமுதாய மறுமலர்ச்சியும் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால், கீழைய நாட்டு விஞ்ஞானிகள் வரலாற்றுக்கும் முந்திய மிகப் பழங்காலத்திலேயே கண்டுபிடித்திட்ட தெய்வீக சத்தி (Divine Power). எண்ணச் சத்தி (Thought Power). பார்வை சத்தி (Eye Power), மனோ சத்தி (Will Power) ... முதலியவைகள் ஏதேனும் தொழிற்புரட்சியை. பொருளாதார வளர்ச்சியை, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கினவா ! ? ! ? என்ற வினாவுக்குத் தெளிவான சான்று நிறை விடை பகர ஆவன செய்து வருகிறார்.நமது குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்.

ஒவ்வொரு தனி மனிதரின் உள்ளத்தையும் திறக்கும் திறவு கோல்களான அடிப்படைக் கருத்துக்கள் செய்திகள், கொள்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள் உணர்வுகள், செயல்திட்டங்கள்.... முதலியவை பற்றியே கூற விரும்புகிறார் நமது குரு பீடம், ஞானாச்சாரியார் அவர்கள். இக்கருத்து உங்களனைவரையும் அவருடனேயே ஒரு கனவுலக ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ளச் செய்திடும். அக்கனவு கலைந்து நீங்களனைவரும் நனவுலகுக்கு வந்த பிறகுதான் ஞானாச்சாரியார் யார்? அவரது சிந்தனைகள், கொள்கைகள் குறிக்கோள்கள்,போக்குகள்,நோக்குகள்,கட்டுப்பாடுகள் திட்டங்கள்.செயல்முறைகள் யாவை? என்ற வினாக்கள் நிலையான வடிவைப் பெறும். அப்போது 'நிழல் நிஜமாகிறது' என்ற பேருண்மை புரியும்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இறப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் எந்த ஒரு மனிதனும் இறப்பின் கடைசி அரவணைப்பு வரை அதைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு மனிதனும் 'தனக்கு இறப்பு வராது' அப்படியே வர நேரிட்டாலும் தான் விரும்புவதையெல்லாம் செய்து முடித்த பிறகே வந்திடும்... என்பது போலவே எண்ணுகிறான். இந்தத் தவறான எண்ணம் ஏறத்தாழ எல்லோரிடமும் வலுப்பட்டு இருப்பதால்தான் 'பொய்', 'ஏமாற்று', 'பொறாமை', 'போட்டி'. 'சதி', 'சூழ்ச்சி' 'அகம்பாவம்' 'ஆணவம்' 'கொலை' 'கொள்ளை' முதலியவை குறையாத மனித சமுதாயமே தொடர்ந்து இருந்து வருகிறது. எத்தனையோ சித்தர்கள், சித்தியார்கள், அருளாளர்கள், அவதாரங்கள், தூதர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் தோன்றிக் கொண்டே இருந்தும் கூட; இம்மனித சமுதாயத்தில் இம்மியளவு கூடக் குறைகளும் கறைகளும் நிலையாகக் குறையவில்லை. ஒவ்வொரு காலக் கட்டங்களில் தற்காலிக மனித சமுதாயத்தில் 'வாய்மை' 'தூய்மை' 'நன்மை' 'அன்பு' 'அறம்' 'அமைதி' 'மகிழ்ச்சி' 'நிம்மதி' 'நிறைவு' 'சமத்துவம்' சகோதரத்துவம்' மனிதப்பாசம்' 'மனிதப்பற்று' 'மனித ஒற்றுமை' பசுமையாகத் துளிர்த்துப்பின் பழுதது உதிர்ந்ததாகத்தான் வரலாறு கூறுகிறது.

தனி மனிதர்களைத் திருத்தி நெறிப்படுத்தவும்; சமுதாயப் போக்கில் வெறிகள் தலைவிரித்தாடாமல் கட்டுப்படுத்தவும்; சமுதாயத்தின் போக்கைச் சுவையும் சுறுசுறுப்பும் உள்ளதாக

☐ குருபத்தியே மலங்களை அகற்றும்

ஆக்கிடவும் உருவாக்கப்பட்ட தத்துவமே* சமயம், மதம், (*Religion) என்று கூறப்படுவது.

குறிப்பிட்ட கூட்டத்தவரின் வளத்துக்கும் தற்காப்புக்கும் வாழ்வுக்கும் வலிமையான சக்தியொன்று தேவையென்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட தத்துவம்தான் அரசியல் என்று கூறப்படுவது.

இந்த இரண்டுக்கும் இன்றியமையாத் தேவைகளை வழங்குவதுதான் 'அறிவியல்' 'விஞ்ஞானம்' 'புறஞானம்' என்று குறிக்கப்படுகின்றது. இது மனிதனின் மடமை, மூடநம்பிக்கை, கண்மூடிப் பழக்க வழக்கம், தேவையில்லாத அச்சம், பயனில்லாத கொள்கை, அடைய முடியாத குறிக்கோள்... முதலியவைகளையெல்லாம் குறைத்தும்; அகற்றியும் வருகின்றது. அத்துடன் இது, மனித வாழ்வுக்குத் தேவையான பல சாதனைகளையும், வசதிகளையும், மருந்துகளையும், உணவு வகைகளையும் படைத்துக் கொடுக்கின்றது.

எனவே, மனிதன் புறவாழ்வில் காணுகின்ற சுகங்களும், சுவைகளும் அகவாழ்வை மறக்கச் செய்துவிட்டன. அதனால் அக வாழ்வுக்குச் சுகம் தரும் 'சமயம்' தனது முதன்மையையும் செல்வாக்கையும் இழக்க நேரிட்டுவிட்டது. இன்னும் சொல்லப்போனால் விஞ்ஞானத்திடம் அளப்பரிய நம்பிக்கையும் விருப்பமும் ஏற்பட்டுவிட்ட காரணத்தால்; இன்றைய நாகரிகத்தின் பெயரால் மனிதன் 'மதம் ஒரு மது' 'சமயம் ஒரு சாக்காடு', 'சமயத் தத்துவம் சாக்காட்டுக்குப் பாதை', 'மதம் மனிதனை விலங்கு நிலைக்குக் கொண்டுபோகவே பயன்படும்', 'மதம் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை' 'சமய வாதம் ஒருவகை வெறியுணர்வையே வளர்க்கும்', 'மதம் பகுத்தறிவுக்குப் பகையானது', 'சமயம் மடமை நிறைந்தது' என்றெல்லாம் கருத்துக் கூறும் துணிவு ஏற்பட்டுவிட்டது. இதனால் தனி நபர் வாழ்வு (Individual Life) குடும்ப வாழ்வு (Family Life) சமுதாய வாழ்வு (Social Life).... முதலியவை பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டன.

இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலையில்தான் 'மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும், மதமும் அறிவியலும், அகஞானமும் புறஞானமும், சமயத்துவமும் பகுத்தறிவு வாதமும்...' என்ற தலைப்பில் இரண்டையும் ஒப்பு நோக்கி ஆய்வு நிகழ்த்த வேண்டிய இன்றியமையாத தேவை, அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அவசியம் 'அரசியல் வாதிகள், சமுதாய வாதிகள், அறிவியல் மேதைகள், சமய வாதிகள், பகுத்தறிவு வாதிகள், சீர்திருத்த வாதிகள், கலைஞர்கள், புதுமை விரும்பிகள்....' முதலியவர்களால் நன்கு உணரப்பட்டு; தேவைக்கேற்பப் பொறுமையோடும் முறையோடும் தொடர்ந்து பலகால் நிகழ்த்தப்பட்டிடல் வேண்டும். அப்படி பல கால் ஆய்வுகள் நிகழ்த்திக் கண்டுபிடிக்கப்படும் முடிவுகள் செயலாக்கப்படல் வேண்டும்.

கண்ணை மூடிக்கொண்டு அனைத்தையும் நம்புகிறவர்களைக் கருத்துக் குருடர்கள், மூடர்கள், பழமை வாதிகள், மடமையில் உழல்பவர்கள் ....என்றெல்லாம் பழிமொழியும், இழிமொழியும் கூறுவது போல்; கண்ணை மூடிக் கொண்டு அனைத்தையும் இழிக்க, பழிக்க, ஒழிக்க முற்படுபவர்களையும் கருத்துக் குருடர்கள், மூடர்கள், பழமை வாதிகள், பகுத்தறிவு வெறியில் உழல்பவர்கள்.... என்றெல்லாம் பழிமொழியும், இழிமொழியும் கூறவேண்டியிருக்கும். எனவே, எதையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு அவற்றை ஆராய்ந்து அறிந்து கொண்டு, அதற்கு மேல் அறிந்தவைகளைப் பிறர் புரிய எடுத்துக் கூறிப் பிறரையும் தம்மோடு சேர்த்துக் கொண்டு மனித வாழ்வு நலமும், வளமும், வலிவும், பொலிவும் பெற்றுத் திகழ இவையெல்லாம் தேவைதானா? தேவையென்றால் எந்த அளவு? தேவையில்லையென்றால் எவையெவை?... என்பதையெல்லாம் நடுநிலையிலிருந்து முடிவு கட்டுபவர்களே உடனடியாக இவ்வுலகுக்குத் தேவைப்படுகிறார்கள்.

அப்படிப்பட்ட நடுநிலை ஆய்வாளர்களின் எண்ணிக்கை பெருகிடல் வேண்டும். அவர்களே வருங்காலச் சந்ததியாரின் வாழ்வுக்குச் சுவைமிகு உணவும், குளிர் நிழலும், மருந்தும் வழங்கவல்ல பயிர்களை வளர்க்கும் நாற்றங்கால் பயிர் போன்றவர்கள். இந்நாற்றங்கால் பயிர்களுக்கே நோய

(சித்தர் இராமாயணத்திற்குப் பின்னால் இதன் தொடர்ச்சி)

□ குருபத்தியே மாயங்களை வெல்லும்

# சித்தர் இராமாயணம்

1. வீடணனும் (இராமாயணத்தில்), கண்ணனும் (பாரதத்தில்) ஒரே மாதிரியான பாத்திரப் படைப்பு பெற்றவர்கள். வீடணன் 'அண்ணன் இராவணனை எதிர்த்துப் போர் தொடுப்பதில்லை', என்று முடிவெடுத்துச் செயல்படுகின்றான். எனவே, கடைசிவரை உத்திகளை மட்டுமே கூறுகின்றான்.

2. கடைசி நாளில் இராமனிடம் இரண்டு அம்புகளை எடுக்கச் சொல்கின்றான் வீடணன். ஒன்று பிறைபோன்ற அம்பு, மற்றொன்று கூரிய அம்பு, கூரிய அம்பைப் பார்த்த உடனே இராவணன் அண்ணாந்து நோக்க, அது இராவணனின் அமுத கலசத்தை உடைக்கின்றது. அதே நேரத்தில் பிறை வடிவ அம்பு அவனது கழுத்தை வெட்டுகின்றது.

3. பொதுவாகச் சித்தர் இராமாயணம் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் குறிக்கப்படவில்லை. அவ்வளவு முக்கியத்துவம் இராமாயணத்திற்கோ பாரதத்திற்கோ தரப்படவில்லை. பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி கூடத் தனது குருபாரம்பரியத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் குறிக்கின்றார். சித்தர் ஏளனம்பட்டியார்தான் மிகவும் சிரமப்பட்டுத் தேடிக் கண்டுபிடித்து இராமாயணத்தையும் பாரதத்தையும் பற்றிய குறிப்புக்களை எழுதுகின்றார். குருதேவர் எழுதுகின்ற குறிப்புக்கள் சித்தர் ஏளனம்பட்டியாரும், குருதேவரின் தந்தையும் எழுதிவைத்துள்ள குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவைதான்.

4. சீதை, தன்னை அரக்கி என்று அயோத்தி அரண்மனையில் கூறித் துன்புறுத்தியதால்; இராவணனைத் தந்தை என்று உணர்ந்த பின்னால்; இராமனை இலங்கைக்கு வரவழைத்துப் பட்டம் சூட்டி அயோத்தியுடன் போர்தொடுத்து அனைவரையும் அழிக்கவே நினைக்கின்றாள்.

5. விசுவாமித்திரரின் அத்திறம் மிகவும் சக்தி வாய்ந்தது. அவர்தான் இராமனுக்கு எல்லா அத்திறங்களையும் கற்றுத் தருகின்றார். வீடணன் அத்திறங்களை ஒச்சுவதிலும், வியூகங்களை அமைப்பதிலும் மிகச் சிறந்தவன். போர் வியூகங்களைப் போல, அத்திறங்களை எப்படி மாற்றி மாற்றி உபயோகிப்பது என்பதை நன்கு அறிந்தவன், இதன் மூலம்தான் இராவணன் மூவுலகையும் வெல்கின்றான். இராவணனின் வில்லும் இராமனின் வில்லும், சிவனுடையதே! எனவே அந்த வில்லை முறிக்குமாறு வீடணன் அத்திற வியூகத்தைக் கூறியதும் இராமன் இராவணனின் சிவதனுசுவை முதல்நாள் போரில் ஒடித்து விடுகின்றான்.

6. இராவணன் தன் மருமகனைப் போரிட்டு அழைத்து வருவதாகத்தான் சீதையிடம் கூறிச் செல்கின்றான். அதனால்தான் கடைசிவரையிலும் போரை எதிரியை அழிக்கும் போராக நடத்தவில்லை.

7. இராவணன் கடைசிவரையிலும் வண்டமர் குழலியை சீதையைப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லை. இராவணன் இறந்தவுடன் சீதை 'எந்தையே! ஏழிசை வல்லவரே! எண்டிசையும் வென்றவரே! என்னால்தான் மாண்டீரோ!" என்று கோட்டையை விட்டு ஓடி வந்து கதறுகிறாள். அப்போது யாரோ ஒரு பெண் தன் கணவனுக்காக அழுது கொண்டு செல்வதைப் பார்த்த வண்டமர் குழலி 'அவன்தான் தனது மகள்' என உணர்ந்து சீதையைக் கட்டிப் பிடித்து அழுகின்றாள்.

'ஐயோ! மகளே! நீ இருப்பது தெரிந்திருந்தால் உன்னைக் கடலில் கொண்டு வைத்துவிட்டு இப்போரை வெற்றியாக்கியிருப்பேனே' — என்று கதறுகின்றாள்.

8. சித்தர் இராமாயணம் கூறுகின்றது:-

'சனகன் மகள் சீதை இந்திராணியைப் போன்ற அழகுடையவள் என்பதைவிட; இராவ

☐ உடம்பு ஆலயம், உள்ளம் கோயில் உயிர் இறைவன்' உணவு அவிர்ப்பலி துணை மந்திரம் துய்ப்பு வேள்வி மக்கள் சித்தி இல்லறம் வீடுபேறு துறப்பது அறமாவது எங்ஙனம், எங்ஙனம்?

ணன் மனைவி வண்டமர் குழலியைப்போல அழகுடையவள் என்பதுதான் சாலச் சிறந்தது. ஏனெனில் இந்திராணியை விட அழகு மிக்கவள் வண்டமர் குழலி என்று மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்'.

9. சுயம்வர மண்டபத்தில் இராவணன் சீதையைப் பார்த்து மனதில் நினைக்கின்றான்:- 'ஆயிரம் கோடி இந்திராணிகளின் அழகு என் மனைவி வண்டமர் குழலிக்கு ஈடாகாது என்று இறுமாந்திருந்தேன். ஆனால் என் மகள் சீதையின் பேரழகோ என் மனைவி வண்டமர் குழலியின் அழகுபோல் பல்லாயிரம் கோடி மடங்கு சிறப்புடையதாக இருக்கின்றது. அந்தோ! இப்பேரழகு மிக்க மகளை என் மார்பிலும் தோளிலும் தூக்கி வளர்க்க முடியாமல் போய்விட்டதே! இவளின் மழலை மொழியைக் கேட்க முடியாமல் போய்விட்டதே! இவளின் தளிர் நடையைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே....!'

10. சீதை தன் மகன்களாகிய இலவகுசர்களிடம் கூறுகின்றாள்:- 'அயோத்தி அரண்மனையில் உள்ளவர்கள் அரக்கி அரக்கி என்று கூறி என்னை அரக்க மனம் படைத்தவளாக்கிவிட்டார்களடா மகன்களே! அவர்கள் பால் எனக்கு இரக்க மனம் வந்து விடக் கூடாது. எனவே அவர்களைத் தனித்தனியாகக் கொன்றுவிடு! அவர்களை அச்சத்தால் துடிதுடிக்கச் செய்து தனித்தனியாகக் கொன்று சாகடிக்க வேண்டும்.'

[அரக்க மனம் = உறுதியான மனம் = இளகாதமனம்]

மனித மனம் = இளகிய மனம்

11. குருதேவரின் தந்தை 'இராவணனைக் காட்டிக் கொடுக்கும் வீடணனும் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசும் ஒன்றே' என்றே கூறுவாராம்.

12. வீடணனுக்குச் சிறுவயது முதலே இராவணனின் சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்ற பேராவலால் சந்தர்ப்பத்தைப் பயனபடுத்திக் கொண்டான்.

13. இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமான். இராமன் அனுப்பிய தூதுவன் அங்கதன். அனுமானைத் தூதனுப்பிச் சீதை அங்கிருக்கின்றாளா? என்று அயோத்தி இளவரசன் கேட்பதை விடுத்துத் திருட்டுத்தனமாக ஒற்று அறிய அனுமானை அனுப்புகின்றான். அதனால்தான் இராவணன் கோபமடைகின்றான்.

14. இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமான் இலங்கை வந்தபோதே வீடணன் அவனோடு ஒப்பந்தம் செய்து கொள்கின்றான் அப்போதே வீடணன் இராமன் பக்கம் போய்விட்டான். இப்போது போனது கண்துடைப்பே என்று வண்டமர் குழலியின் தந்தையான விசுவகர்மாவிடம் கூறுகின்றான் இராவணன்.

15. இராவணன் அனுமானை ஒற்றன் என்று கூறுவான். வீடணனோ தூதுவன் என்று வாதிடுவான். தூதுவன் என்றால் என்னை நேரடியாக அல்லவோ வந்து சந்திக்க வேண்டும் திருட்டுத்தனமாக ஏன் சீதையை இலங்கையில் தேட வேண்டும். அதிலும் இராமன் ஒரு சூரியகுல அரசன். எனவே அரச நீதியின்படி ஒற்றனைக் கொல்லுதல் வேண்டும். அதனால் அனுமானைத் தீயிட்டு அனுப்புகின்றேன' என்றான் இராவணன்.

16. கும்பகர்ணனுக்குத் திருமணம் ஆகாததால் முதலில் அனுமான் தன்னைச் சந்தித்தபோதே வீடணன் இராவணனின் இரண்டு மகன்களையும் கொன்று விட்டால் தான் நேரடியாகப் பட்டத்துக்கு வரமுடியும் என்று கூறுகின்றான். அதன்படி சிறிய பாலகனாக இருந்த அட்சயக் குமாரனை எளிதாகக் கொன்ற அனுமான் மேகநாதனைக் கொல்ல முயல்கையில் அவன் மாயத்தால் எளிதாக மேலே சென்று விடுகின்றான்.

(தொடரும்)

☐ குருவே, இறை நிலைக்கு வழியாக, வழித்துணையாக வழியின் எல்லையாக, வழிநடைப் பயணத்தின் பயனாக இருப்பர்

கண்டு விடுமென்றால் வருங்காலம் வறட்சியும், வறுமையும் நிறைந்த ஒன்றாகவே இருந்திடும். எனவே, நடுநிலை நெஞ்சமும், ஆராய்ச்சி சிந்தையும், பொறுமை உணர்வும், பரந்த அறிவும், உண்மை காணும் நோக்கும், தொண்டுமிகு போக்கும் உடையவர்களை உருவாக்கும் மாபெரும் பணியே இன்றைக்கு ஆற்றிட வேண்டியதாக உள்ளது.

இப்பணிக்குரியவர்களைத் தேடவும், தேடிக் கிடைக்கப் பெற்றவர்களை உருவாக்கவுமே தன் வாழ்வின் பெரும் பொழுதினைச் செலவிட்டு வருகிறார் நமது குருபீடம் ஞானாச்சாரியார். இத் திருநாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலும் வாய்ச்சொல் வீரர்களே மிகுதி. அதிலும் வெட்டிப் பேச்சு, திண்ணைப் பேச்சு, வீண் பேச்சு, வம்புப் பேச்சு... என்று பலவகைப் பேச்சுக்களில் பொழுதைப் போக்குபவர்களே அதிகமாக உள்ளனர்.

இதை படிக்கும் கூட்டம் உயர்ந்த மலைச் சிகரங்கள் நிறைந்த இடம்போல் உயர்ந்த கல்வியுணர்வு உடையவர்களைப் பெற்றிருக்கின்றது. மலை முகடுகளிடையே எழுப்பப்படும் ஒலி, தொடர்ந்து பல கல் தொலைவுக்கு எதிரொலித்துக்கொண்டே செல்லும். அதுபோல் நமது குருபீடம் ஞானாச்சாரியார் கூறும் கருத்துக்கள் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பலரிடம் எதிரொலித்துக் கொண்டே செல்லும் என்று எண்ணுகின்றேன். அந்த எண்ணத்தால்தான், இன்றும் என்றும் உலகில் சிந்தனைக்குரியதாக உள்ள 'சமயமும் அறிவியலும்' என்ற தலைப்பில் எழுத விரும்பினேன். இந்த சிந்தனைகள் உங்களைச் சிந்தனையாளர்களாக்கிடும்.

சமயம், பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தனது ஊழ்வினைக்கும் விதிக்கும் ஏற்பவே வாழ்ந்து மாண்டிடுகின்றான் என்று கூறுகின்றது.

சமயத்தை மறுக்கவோ, எதிர்க்கவோ விரும்புகின்றவர்கள் அறிவியலின் துணையையே நாடுகின்றார்கள். அதாவது, அறிவியல் என்பது சமயத் தத்துவங்கள் பொய்மையானவை என்று மெய்ப்பிக்கத் தோன்றிட்ட ஒன்று என்று பலர் நம்புகிறார்கள். இப்படிப் பலரின் நம்பிக்கைக்கும் விருப்பத்துக்கும் உரியதாகிவிட்ட அறிவியலின் உண்மை நிலை என்ன? என்பதை விளக்குவதே எங்கள் போன்றோரின் தலையாய கடமை.

இந்த அறிவியல் சமயம் கூறுவது போல் மனிதன் மாண்டு போகத் தேவையில்லை. மனிதன் மாண்டு போகாமலிருக்க மருந்தொன்று உள்ளது என்றோ! விஞ்ஞான வாழ்வியல் முறை ஒன்று உள்ளது என்றோ!! இன்று வரை கூறிட முன் வரவில்லை. ஏனெனில், இறப்பு(Mortality) என்பது இயற்கையின் நியதி, சட்டம், விதி, முறை, அடிப்படை, ஒழுங்கு.... என்ற கருத்தினை ஒப்புக் கொண்டுதான் அறிவியல் பிறந்து வளர்ந்து வருகின்றது.

அறிவியலின் அடிப்படையில் வளர்ந்துள்ள மருத்துவத்துறை வல்லார்களில் யாருமே 'நான், இந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்றித் தருகிறேன்; இந்த நோயாளியை இறப்பிலிருந்து தடுத்து நிறுத்தி விடுவேன்; இந்த நபருக்கு இனி மேல் இறப்பே இருக்காது''... என்று கூறிட முன் வருவதில்லை. ஏனெனில், இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள மருந்துகளில் எந்த மருந்தும் மரணத்தைத் தடுக்கும் ஆற்றலுடையதில்லை. இன்னும் சொல்லப் போனால் எந்த மருந்தாலும் குறிப்பிட்ட நோயைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் நலப்படுத்திடும் என்று உறுதி கூறிட முடியவில்லை. அதாவது, குறிப்பிட்ட நோயை நலப் படுத்துதற்கென்றே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் கூட; அந்த நோய்க்குரியவரின் உடல் வளம், வலிமை, நோயின் முதிர்ச்சி, நோயாளியின் உணவு முறை...

( தொடரும் )

# அருளுலக ஆச்சாரியார்கள்

## எழுதியவர் : சத்தி வீரத ஞானி

பிற்காலச் சோழப் பேரரசின் (கி. பி. 785-1040) தந்தையான பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞால குரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் மகன் கருவூர்த் தேவருக்கும் முதலாம் இராசேந்திர சோழன் மகளுக்கும் பிறந்த திரு மாளிகைத் தேவர் எழுதிய குருபாரம்பரிய வாசகங்களில் காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய குறிப்புகள் நிறைய இருக்கின்றன.

திருமாளிகைத் தேவர் தமது குரு பாரம்பரிய வாசகங்களில்; காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழர்; இவர் கருணீக்க சைவ வேளாள குலத்தில் தோன்றியவர்; இவரது முன்னோர்கள் சீர்காழியில் உள்ள சிவன் கோயிலில் பணியாற்றி வரும் சிவாச்சாரியார்களேயாவார்கள். அதாவது, இவர் சீர்காழிச் சிவாலயத்தில் உள்ள குரு, குருமார், குருக்கள், அந்தணர், ஆச்சாரியார் ... என்ற அருளுலகப் பட்டங்களைப் பெற்றிட்ட சைவ வேளாள மரபில் தோன்றியவர். இவர் ஆலமர் கடவுள் புதல்வனான முருகப் பெருமானின் திருத்தோன்றலாக பதிலியாகப் பிறப்பெடுத்த சமயக்குரவர் திருஞான சம்பந்தரின் மறுபிறப்பாகத் தோன்றியவரேயாவார். இவர் சிவனின் தோன்றலாகவோ, வடிவாகவோ, அல்லது பதிலியாகவோ தோன்றவில்லை! தோன்றவில்லை!! தோன்றவில்லை!!! தோன்றவேயில்லை. இவர், தமிழ் மொழியில் மிகுந்த ஆழமான புலமை பெற்ற பிறகே பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்திற்குரியவைகளைப் பிறமண்ணினரான பிறமணர் எனும் வட ஆரியர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்து பல இலக்கியங்களை உண்டாக்கினார். இவர் பதினெண் சித்தர்களின் அருளுலக இலக்கண இலக்கியங்களின் படி உச்சிக் குடுமியராகத் தாடிமுடியுடன் வாழ்ந்தார். இவர் தனக்கு முன் தோன்றி வாழ்ந்திட்ட 31 ஆதிசங்கராச்சாரியார்கள் அந்தணர் வடிவிலே வாழ்ந்து வெள்ளாடை மேனியராக, உச்சிக் குடுமியராக, நூல் அணிந்தோராக, மாந்தரீக வல்லியாக தாந்தரீகச் சித்தியாளராக, வேதசித்தராக விளங்கியது போலவே தானும் விளங்கினார். இவர் திருமந்திரத்தையும், திருக்குறளையும் தமது கண்ணெனப் போற்றினார் என்பதாலும்; இவர் திருமந்திரம் கூறும் அந்தணர் தோற்றத்தையே பெற்றிருந்தார்.

'நூலும் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுதலிலே'
(திருமந்திரம்—230)

இதன்படி இவர் உச்சிக் குடுமியராகவும், பூணூல் அணிந்தவராகவும், வெள்ளாடை மேனியராகவும், திருநீறு குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள் எனும் ஐந்தினையும் அணிந்தே திருக்கோலக் காட்சியினராக அல்லது திருக்கோல வடிவினராக விளங்கினார் என்ற பேருண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால், இவர் மொட்டையடித்துக் கொண்டு காவி கட்டிக் கொண்டு பூநூல் இல்லாமல் திருநீறு மட்டும் பூசிக்கொண்டு காட்சியளித்ததாக நான்கு மடத்து மடாதிபதிகளும் பிறாமண சன்னியாசிக் கோலத்தில் வாழ்ந்து காட்டுகிறார்கள். இதனை ஏமாளிகளான, அப்பாவிகளான எனது தாய் நாட்டு மக்கள் நம்புகிறார்கள். இதற்கென்ன செய்வது? என்னால் முயன்றவரை என் தாத்தாவின் குருவாக்கு குருவாக்கியம, குருவாசகம், குரு பாரம்பரியம எனும் நான்கிலிருந்தும் எண்ணற்ற வாசகங்களைச் சான்றாகவும், ஊன்றாகவும எடுத்துக் காட்டி உண்மையை விளக்கினாலும நம்புவாரில்லை.

'காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழன் தான்' என்ற கருத்து எப்படி முழுமையாகவும் முதன்மையாகவும் விளக்கியுரைக்கப்பட்டிடல் வேண்டுமோ; அதைவிட மிக மிக முழுமையாகவும், முதன்மையாகவும் விளக்கியுரைக்கப்பட வேண்டிய செய்தி என்னவென்றால்; அது, ஆதிசங்கராச்சாரியார் மொட்டையடித்துக் கொண்டு, காவி கட்டிக்கொண்டும் குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள் அணியாமல் திருநீறு மட்டும அணிந்தும் பூணூல் இன்றியும, பிறாமண சன்னியாசிக் கோலத்தில் வாழ்ந்தார் என்பதை மறுப்பதேயாகும்.

# அருட்போர்

எழுதியவர் :

## அருட்சேனை தளபதி

இந்துக்களே, இந்துமதத்தை தெரிந்து, புரிந்து, அறிந்து, ஆராய்ந்து, உணர்ந்து, தெளிந்து, நம்பி, ஒப்புக்கொண்டு, ஏற்றுச் செயல் படுத்தும் இந்துமத வாழ்வு மீண்டும் மலர வேண்டும்! மறுமலர்ச்சி அடையவேண்டும்! அப்பொழுது தான் இந்துமதம் வளவளர்ச்சி பெறும்! வலிமை செழிச்சி பெறும்! ஆட்சி மீட்சி பெறும்!

இப்படி 'இந்து' மதத்துக்காக முழுக்க முழுக்கப் பாடுபடுவதற்காக இந்த 'இந்து ஆரணம்' வெளிவருகிறது. இந்து வேதத்தின் பல்வேறு துறைகளுள் ஒன்றுதான் 'ஆரணம்' என்பது. அதாவது சுருதி ஆகமம், ஆரணம், மீமாம்சை என்று நான்கு பிரிவுகள் இந்து வேதத்தில் ஓர் அமைப்பாக உள்ளது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

'அன்பே சிவம்' என்பதுதான் இந்து மதத்தின் தலையாய உயிரோட்டமான கருத்து. தத்துவம் ஆகும். இதற்காகத்தான் 'இந்து வேதம்; (1)108 பூசைமொழி நூல்கள், (2)48 பூசை விதி நூல்கள் (3) 96 தத்துவ நூல்கள். (4) 144 செயல் சித்தாந்த நூல்கள் என்றும்; இந்துமத நூல்கள் 1. ஆறு வகைப்பட்ட வாக்குகள். 2. ஆறு வகைப்பட்ட வாசகங்கள். 3. ஆறுவகைப்பட்ட வாக்கியங்கள். 4. ஆறுவகைப்பட்ட தரங்கள். 5. ஆறுவகைப்பட்ட திரங்கள் 6. ஆறுவகைப்பட்ட திறங்கள். ஆக 36 நூல்கள் இந்துக்களுக்காக ஆகமொத்தம் 432 நூல்கள் இந்துக்களுக்காக இருக்கின்றன. இதனை இந்துக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

மேற்படி நூல்கள் அனைத்திலுமே மனித வாழ்வில் அன்பு, அமைதி, நிம்மதி, நிறைவு, ஒற்றுமை, பற்று, பாசம், தோழமை, நட்பு, பணிவு கனிவு, பாவு, இரக்கம், ஒருவருக்கொருவர் உதவி செய்தல்.. முதலிய பண்புகள் நன்கு முளைத்து, கிளைத்து செழித்து வளர வேண்டும் என்ற கருத்தையே கொள்கையாக, குறிக்கோளாக நோக்கமாக இந்துமதத்தின் அறநெறியாக இந்துக்களின் வாழ்வியல் முறையாக இந்துமத புராண, இதிகாச இலக்கிய நூல்களின் விளக்கமாக அமைந்திருக்கின்றன. அமைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி அன்புச் சூழ்நிலையை அமைதிச் சூழ்நிலையை நிம்மதிச் சூழ்நிலையை ஒற்றுமைச் சூழ்நிலையை... தொடர்ந்து காப்பாற்றுவதற்காக; 'நன்கு பயிர் செழித்து வளர்வதற்காகப் பயிர்களின் ஊடே முளைக்கின்ற களைகளை வேருடன் பிடுங்கி எடுக்க வேண்டும்' என்ற உலகியல் நடைமுறைப்படி அருட்போர் நிகழ்த்தித் தான் ஆகவேண்டும்! ஆகவேண்டும்!! ஆக வேண்டும்!!! அதாவது நாட்டில் அமைதியைக் காக்க வேண்டுமென்றால் ஆயுதம் தாங்கிய காவல் படை தேவை!; நாட்டையே அன்னிய நாடுகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் எல்லா வகையான போர்க்கருவிகளும் ஆயுதங்களும் சாதனங்களும் நிறைந்த நிலையான சேனை தேவை. இக் கருத்தின் விளக்கமாகத்தான் இந்துமதக் கடவுள்கள் அனைவரும் போர்க்கோலத்தில் காவல் பணியினைச் செய்கிறார்கள். இதைத்தான் இந்து மதத்தின் நான்குயுக வரலாறும் அருட்போரின் வரலாறுகளாகவே இருக்கின்றன. இருந்து வருகின்றன. இனியும் இருக்கப் போகின்றன.

இந்தக் கலியுகத்திலும் அருட்போர் முப்பத்தொன்பது முறை நிகழ்ந்தே தீர வேண்டும் என்பதுதான் இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் இம் மண்ணுலகுக்கு அருளிய பதினெண் சித்தர்களின் திட்டம். அதாவது 'விளைகின்ற பயிருக்கு இரண்டு மூன்று முறை களையெடுத்தால் பயிர் நன்கு செழித்து வளரும்' என்ற உலகியலின்படி அடிக்கடி அருட்போர் நிகழ்ந்தால்தான் அருட்பயிர் நன்கு முளைத்து கிளைத்து தழைத்து செழித்து வளர முடியும். அதாவது அருளுலகின் அறியாமைகள் புரியாமைகள் தெரியாமைகள் தேக்கங்கள் தயக்கங்கள் மயக்கங்கள் விலக்கங்கள் முடக்கங்கள் தேவையில்லாத அடக்க ஒடுக்கங்கள் கண்மூடிப் போக்குகள் நாத்திக நோக்குகள் போக்குகள் முதலிய அனைத்தையும் அவ்வப்போது குறிப்பிட்ட கால கட்டங்களில் நாட்டு நிலைமையை அறிந்து தேவையைப் புரிந்து வேருடன் களைந்து எடுத்திட அல்லது முழுமையாக எடுத்திட அருட்போர் நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். எனவே அருட்போர்கள் நிகழ்ந்தது சரியே! நிகழ்ந்து கொண்டிருப்பதும் சரியே! நிகழப்போவதும் சரியே....!

(தொடரும்)

குறிப்பு : இப்பகுதியில் அருட்சேனை தளபதி யுக அருட்போர்கள்பற்றி தொடர்ந்து எழுதுவார்)

☐ குரு வாழ்த்தே அனைத்து சக்திகளையும், சித்திகளையும், முக்திகளையும் வழங்கும்

# கேள்வி-பதில்

கேள்வி :

★ இந்து ஆரணம் படித்தேன் மிகவும் நன்றாக எழுதியிருந்தீர்கள். ஆனால் ஒன்றுமே புரிய வில்லை. என்ன காரணம்?

— S. பூமிநாதன்
திருச்சி.

பதில் :

☐ அன்பரே ஆழமான சிந்தனையில் அல்லது மனக் குழப்பத்தில் இருப்பீர் என்று தெரிகிறது. குழப்ப நிலையில் இருந்து விடுபட்ட பிறகு படித்தால் புரிந்திருக்கும்.

கேள்வி :

★ சித்தர் இராமாயணம் என்று எழுதியிருக்கிறீர்கள். வால்மீகி, கம்ப இராமாயணங்கள் வேறா?

— புலவர் பாண்டியன்
மதுரை.

பதில் :

☐ வால்மீகி, கம்பர் போன்ற புலவர்களுக்கு முன்பே கருவாக பதினெண் சித்தர்களின் 'இராமாயணம்', 'இராமகாதை', 'இராவணகாதை' 'இராவணன் நீதி', 'சீதை நீதி' 'சனகர் அறம்' 'தசரதன் அறம்' வண்டமர் குழலி (மண்டோதரி) புலம்பல் என்று அறுபது நூல்கள் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் பலரும் இராமாயணத்தை கதை கதைகளாக காவியமாக எழுதினார்கள்.

கேள்வி :

★ உலகம் தோன்றி மனிதன் தோன்றியது எப்போது? எங்கு?

—ராமமூர்த்தி
கோவை.

பதில் :

☐ உலகம் முதல் தோற்றமே 'தென்குமரிக் கண்டம்' என்று வரலாற்று சான்றுகள் கூறுகின்றன. தென் இமய மலையில் தோன்றிய நதிகள் தான் வட எல்லை வரை ஓடிக் கடலில் கலந்தது. காலபோக்கில் தென்குமரி கண்டம் அழிவடைந்து விட்டதால் இன்று வடகுமரி கண்டம் (இமய மலை) வட மாநிலத்தில் வட குமரி கண்டமாக விளங்குகிறது. தென்குமரி ஒன்று இருந்திருக்காவிட்டால் வடகுமரி ஒன்று இருந்திருக்க முடியாது.

கேள்வி :

★ பன்னிரெண்டாவது ஞானாச்சாரியார் யார்?

— C.M. இராஜகோபால்
வேப்படிதாளம்

பதில் :

☐ மூன்று யுகங்களில் இந்து மதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரியக் குரு பீடம் குருதேவராக ஒன்பது ஞானாச்சாரியார்கள் இருந்தார்கள். கலியுகம் 3001-லிருந்து 3251- வரை : ஞால குரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூறார்'' பத்தாவதாக இருந்தார்.

இவரை அடுத்து பதினோராவது ஞானாச்சாரியார் ''ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார்''. இப்பொழுது பன்னிரெண்டாவது ''ஞானாச்சாரியார் குருமகா சன்னிதானம் ஞால குரு சித்தர் அரசயோகிக் கருவூறார்'' அவர்கள் இந்து வேதம் தழைக்கவும், இந்து மதம் பிழைக்கவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

# வாசகர் கடிதம்

☐ இந்து ஆரணம் படித்தேன். மிக மிக அற்புத படைப்பு ஞானாச்சாரியாரின் கருத்துக்கள். தமிழ் மொழி. சிதத்ர் நெறி முறைகள் தேவையான பொக்கிசம்.

—சண்முகம்
கரூர்.

☐ சித்தர் இராமாயணம் படித்தேன். இராவண னின் குருவாகிய 'யக்ஞுவல்லியர்' இராவண னிடம் 'சிதை உன் மகள்தான்' என்று உலகறிய நீ ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்கின்றார் என்றும் சிதைக்கு ஒரு வாரிசு உண்டானபின் உல கறிய தன் மகள்தான் சிதை என்று அறிவிக்கப் போவதாகச் சொன்னான் என்று யக்ஞுவல்லிய ரின் இராமாயணத்தால் தெரிய முடிகிறது என் பதை எண்ணும்போது இந்து ஆரணம் சிறந்த வேத நூல்.

—குணசேகரன்
நெல்லை.

☐ சார் இந்து ஆரணம் படித்தேன். ஒரே வார்த் தையை பல தடவை படிக்கும்போது எரிச்சல் வரு கிறது. புத்தகத்தை தொடவே மனசு இல்லை.

—தமயேந்தி
சேலம்.

☐ இந்து வேத வரலாற்று பேருண்மைகள் புள்ளி விவரமாக எழுதியிருந்தீர்கள். அட்டையின் உள் பக்கத்தில் பாராட்டுக்கள் எங்களை போன்ற கல்லூரி மாணவர்களுக்கு தேவையான தியரி.

—ராஜேந்திரன்
திருச்சி பாரதிதாசன் பல்கலை கழகம்

☐ ''இந்து'' என்ற சொல்லுக்கு நூற்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இருப்பதை ''இந்து ஆரணம்'' படித்து பிரமித்துப் போனேன்.

—தமிழ்மணி
தஞ்சை.

☐ சித்தர்கள் அருளிய காயந்திரிகள் எவை என்பதும் காயம் என்றால் உடல் திரி தல் என்றால் பக்குவப்படுத்துதல் என்றும் மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்த ரீகம் கற்றுக் கொடுக்கப்படும் என்ற விளக்கக் கட்டுரை மிகவும் என்னை கவர்ந்தது.

—வெங்கட்
தர்மபுரி.

☐ இந்து என்ற சொல் தமிழ் சொல் என்று அடித்து கூறியிருப்பதை கண்டு மனமுருகி போனேன். பல இடங்களில் இந்து மதம், தமிழ் மொழி தோன்றியது குமரிக் கண்டம் என்று எழுதியது படித்து மகிழ்ச்சியுற்றேன். பாராட்டுக் கள்.

— சோமசுந்தரபாரதி
மதுரை

☐ காயந்திரி மந்திரம் தமிழ் மொழியில் இருப்ப தாக எழுதியது கண்டேன். ஒவ்வொரு காயந்திரி யும் இந்து ஆரணத்தில் வெளியிட்டால் பயன் உள்ளதாக இருக்கும்.

—அழகப்பன்
காரைக்குடி.

☐ கத்தாழம் மிக்க சிறந்த கருத்துக்களை தாங்கிய ''இந்து ஆரணம்'' தெளிவாக சுருக்க மாக எழுதினால் படிப்பதற்கு சிரமமின்றி இருக் கும்.

—விசயா
நாகர் கோயில்.

# 'இந்து மதம்'

| | | |
|---|---|---|
| 1. | இந்து மதம் | ஒரு ஞானம் |
| 2. | ,, | ஓர் உலகாயுத ஞானம் |
| 3. | ,, | ஒரு மானுடவியல் ஞானம் |
| 4. | ,, | ஓர் அனுபவியல் ஞானம் |
| 5. | இந்து மதம் | ஒரு தத்துவவியல் ஞானம் |
| 6. | ,, | ஓர் ஒலியல் (நாதாந்த) ஞானம் |
| 7. | ,, | ஒரு செவ்வியல் (சித்தாந்த) ஞானம் |
| 8. | ,, | ஒரு போதியல் (போதாந்த) ஞானம் |
| 9. | ,, | ஒரு நிட்டத (நிட்டை-தவம்) ஞானம் |
| 10. | இந்து மதம் | ஒரு *சூத்தர ஞானம் (*சூத்திர, சூத்திற, ஞானம்) |
| 11. | ,, | ஓர் *எந்தர ஞானம் (*எந்திர ஞானம், எந்திற ஞானம்) |
| 12. | ,, | ஒரு ' மந்தர ஞானம் (' மந்திர, ஞானம் மந்திறஞானம் மாந்தரஞானம், மாந்தரீகஞானம்) |
| 13. | இந்து மதம் | ஒரு ' தந்தர ஞானம் (' - தந்திர, தந்திற தாந்தர, தாந்தரீக ஞானம்) |
| 14. | இந்து மதம் | ஒரு ' சாத்தர ஞானம் (' - சாத்திற, சாத்திர ஞானம்) |
| 15. | இந்து மதம் | ஒரு ' தோத்தர ஞானம் (' - தோத்திர, தோத்திற ஞானம்) |
| 16. | இந்து மதம் | இந்து மதம் ஒரு ' வேள்வி ஞானம் (' ஓமஞானம், ஓகஞானம், யாகஞானம், யக்ஞ ஞானம்) |
| 17. | இந்து மதம் | ஒரு பக்தி ஞானம் |
| 18. | ,, | ஒரு சத்தி ஞானம் |
| 19. | ,, | ஒரு சித்தி ஞானம் |
| 20. | இந்து மதம் | ஒரு முத்தி ஞானம் |
| 21. | ,, | ஒரு நான்மறை ஞானம் |
| 22. | ,, | ஒரு நான்முறை ஞானம் |
| 23. | ,, | ஒரு நானெறி ஞானம் |
| 24. | ,, | ஒரு நான்வேத ஞானம் |
| 25. | இந்து மதம் | ஒரு யோக ஞானம் |
| 26. | ,, | ஒரு போக ஞானம் |
| 27. | ,, | ஒரு மோக ஞானம் |
| 28. | ,, | ஓர் பிண்ட ஞானம் |
| 29. | ,, | ஓர் அண்ட ஞானம் |
| 30. | இந்து மதம் | ஓர் அண்டபேரண்ட ஞானம் |
| 31. | ,, | ஓர் அரசியல் ஞானம் |
| 32. | இந்து மதம் | ஓர் சமுதாய ஞானம் |

சூத்தரம், திருவாக்கு, குருவாக்கு, கருவாக்கு, அருள்வாக்கு மருள்வாக்கு என்னும் நூல்களில் இருந்து இந்துமதப் பெருமையையும், அருமையையும், சிறப்பையும் விளக்கும் ஒரு சில வாசகங்கள் எடுத்துத் தரப்பட்டுள்ளன.

தொகுப்பு :

**பதினெண் சித்தர் மடம்**

### வெட்டவெளிக் கருவறை கொண்டருளு
### அருவுருவ தேவி மூகாம்பிகை

# அருள் வேட்டல் மாலை

நாநிலத்தீர் வாரீர் போகாப்புனலில் நீராடுவீர்
அடங்காப் பசிகளை வேகாத் தழையால் தணிப்பீர்
அறிவு அடங்கச் சாகாக் கல்வி கற்பீர்
உணர்வு உய்யத் தூய வாய்மை துய்ப்பீர்
தேய்வும் தொய்வும் மாயத் தேவியைக் காண்பீர்
யாகச்சுடர் நின்று மனமுவந்து கூவுகிறோம்
ஆய்வு செய்வீர் ஆக்கம் பெறுவீர்
மாஞால ஞான மெல்லாம் பெற்றிடுவீர்
சித்த கணமாகிடச் சித்தம் பெறுவீர்
மெத்த வித்தகம் பேசிப் பித்தாகிடாதீர்
பத்தோடு இரண்டு சேர்த்துப் பார்த்திடுவீர்
பத்துக்கள் நீக்கிப் பயன் பெற்றிடுவீர்
பத்தியால் சத்தியாகிச் சிவமாகி முத்தியாவீர்
வேதாகம நிடதப் போதை நீங்குவீர்
சாத்திர தோத்திரப் பாதை கடப்பீர்
மந்திர தந்திர வாதை அகற்றுவீர்
எந்திர சக்கர ஓதை ஒழிப்பீர்
திருவும் குருவும் ஒன்றென உணர்வீர்
மறை முறை நெறி கற்றிடுவீர்
வேதம் நாதம் போதம் பயின்றிடுவீர்
சித்தம் பூசை ஞானம் ஆற்றிடுவீர்
ஓமயோக யாகயக்ஞ வேள்விகள் செய்திடுவீர்
கொடிலை கந்தழி வள்ளி ஓம்பிடுவீர்
தேடியே அருட்கலை ஆயகலை [illegible]ட்டிடுவீர்
நாடியே பதின்மூன்று நிலைகளை உற்றிடுவீர்
கூடியே நாற்பத்தெட்டு நிலைகளை அடைந்திடுவீர்
உய்வு வழங்கு வாய்மைகளைத் துய்ப்பீர்
உண்மையிது நன்மையிது பயனுறுவீர் வாரீர்
என்னை யறிந்து தன்னை யறிவீர்
தன்னை யறிந்து தலைவனை யறிவீர்
வினைகள் அகன்று கல்ப நிலைகள் எய்துவீர்

ஞானாச்சாரியார்

# ஈசுவரி காயந்திரி

## மந்திரம்

கோலமயில் வடிவம், நீலக்கடல் தோற்றம்
　　பனிமலைத் தேகம், ஈசுவரி ஆரணம்;
பால்வண்ண மேனிநாதம், பவள இதழ்க் கோலம்,
　　முத்துப்பல் ஆக்கம், சர்வேசுவரி ஆகமம்;
கார்மேகக் கூந்தல் போதம், உயிர் மூக்கின் பாடகம்,
　　எழிற்காதின் ஆடகம், பரமேசுவரி நேமம்;
சங்குக் கழுத்தின் ஓதம், உயிர் மருப்பின் ஏடகம்,
　　மின்னலிடையின் ஊடகம், மகேசுவரி நியமம்;
வாலை மீன் காலின் சித்தம், செந்தாமரைப் பாதயோகம்,
　　அன்ன நடையின் மோகம், பராசத்தி வேதம்;
மகா சத்திப்பீடம், ஏந்தரீகத்தடம், தாந்தரீக மடம்;
　　மாந்தரீகப் பாடம், யோகபோகத்தவ வடம்;
ஒக ஓமம்! போக மோகம்! யாகயக்ஞம்! வேள்வித்தவம்!
　　　　　　　　　　　　　　　　　　பூசைஞானம்!

இராசிபலன் பற்றிய
அதிசய உண்மைகள்
இராசிபலன் தினந்தோறும்,
வாரந்தோறும், மாதந்தோறும்
கணிப்பது சரியா?

-விளக்கம் உள்ளே...

## 'இந்து ஆரணம்'

(சித்தர் ஆன்மீக திங்களிதழ்)

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரு. | 40/- |
| தனி இதழ் | ரு. | 3.50 காசு |

## தொடர்பு முகவரி :

ஆசிரியர்
"இந்து ஆரணம்"
நெ. 13, குமாரசாமித்தெரு,
வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053

போன் : 654447

## மாவட்டந்தோறும் ஏஜென்ட் தேவை!

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரு. | 1000 |
| 2-ம் பக்கம் | ரு. | 750 |
| 3-ம் பக்கம் | ரு. | 600 |
| உள்பக்கம் முழு பக்கம் | ரு. | 500 |
| அரைப் பக்கம் | ரு. | 250 |

ஆசிரியர் & வெளியிடுவோர் : ரு. இரவிமணி No. 10. டிரஸ்ட்பாக்கம் தெற்கு மந்தைவெளி, சென்னை-28.
அச்சிடுபவர் : P. கணேசன், பொன்னர் சங்கர் ஆர்ட் பிரஸ், 277. M.G.R. காலனி, அண்ணாநகர், சென்னை-40.